Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

உலகில்
215 நாடுகளையும், 1,38 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை–09 | 24–11–2005 | வியாழக்கிழமை | ஓசை–280

## 25 அமைச்சர்கள், 29 பிரதி அமைச்சர்கள்

# பாதுகாப்பு, நிதி சனாதிபதி மகிந்தவிடம் வெளிவிவகாரம் மங்கள சமரவீரவிடம்!

## அநுராவிற்கு சுற்றுலாத்துறை மட்டும்

(கொழும்பு)

**சனாதிபதி மகிந்தராஜபக்ஷ நேற்று அமைத்த புதிய அமைச்சரவையில் 25 அமைச்சர்கள், 29 பிரதி அமைச்சர்கள், 23 அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். இதேவேளை பாதுகாப்பு, நிதி ஆகிய அமைச்சுக்களைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டுள்ள சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிவிவ காரத்துறையை மங்கள சமரவீரவிடம் வழங்கியுள்ளார்.**

நேற்றுக் காலை பதவி ஏற்ற அமைச்சரவையில் முன்னைய அமைச்சரவையைவிட அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்ட அதேவேளை நிதி மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சுக்கள் முன்னைய அமைச்சர் களிடம் இருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறைஅமைச்சராக மட்டும் அநுரா பண்டார நாயக்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## உத்தியோகபூர்வ கையளிப்பு நேற்று நடைபெறவில்லை

(கொழும்பு)

சனாதிபதி மகிந்தராஜபக்ஷவிடம் நேற்று உத்தியோகபூர்வமாக பொறுப்புக்களை சந்திரிகா குமாரதுங்க கையளிப்பதாக இருந்தபோதும் கையளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி மகிந்தராஜபக்ஷவிடம் வெளிச்செல்லும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தியோக பூர்வமாக நேற்று பொறுப்புக்களையும், கடமை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடும்மழை வெள்ளத்தால் கொழும்பில் ஆறு பேர் பலி

தென்னிலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் ஆறு பேர் உயிரிழந்தனர். கொழும்பு கொம்பனித்தெரு, ஹொரணை, களுத்துறை, கேகாலை ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர். கொம்பனி வீதியின் வோக்ஷோல் வீதியில் மதில் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். ஹொரணையில் இரண்டு இளைஞர்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டதால் உயிரிழந்ததாகப் பொலிசார் தெரிவித்தனர். களுத்துறை பிரதேசத்தில் வீடொன்றின் சுவர் இடிந்ததில் பெண்

(12ஆம் பக்கம் பார்க்க)



அநுரா அமைச்சராகப் பதவியேற்கையில்...

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடந்த சில தினங்களாக பெய்து வரும் தொடர் மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுமாறு கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கேட்டுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 17697 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களில் 6697 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள், பொதுமண்டபங்கள், உறவினர் வீடுகள் என்பனவற்றில் தங்கியுள்ளன. இவர்களுக்கான மூன்று நாள் சமைத்த உணவு மாத்திரம் வழங்கப்படுகிறது. ஏனைய உலர் உணவுப் பொருட்கள் மற்றும் படுக்கை விரிப்புக்கள், போர்வைகள், நுளம்பு வலைகள், தரப்பாள்கள் போன்றன வழங்கப்பட வேண்டும். இவற்றை வழங்குமாறு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வேண்டுதல் விடுத்துள்ளார்.

வெள்ள அபாயத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தவிர 11000 குடும்பங்களின் வீடுகளில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு இதுவரை எந்த உதவிகளும் வழங்கப்பட

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்நாள் நிகழ்வுகளை லண்டன் பொலிஸ் தடுக்கக்கூடாது!

### *நீதிமன்றத்தில் தமிழ் அமைப்புக்கள் மனுத் தாக்கல்*

எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி பிரித்தானியாவில் நடைபெறவுள்ள மாவீர்தின நிகழ்வை மெட்ரோபொலிடன் பொலிசார் தடுக்கக்கூடாது எனக் கோரி அங்குள்ள தமிழ் அமைப்புக்கள் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளன.ஹரோ தமிழ் நலன்புரிச் சங்கம் இது தொடர்பில் அங்குள்ள மேல் நீதிமன்றத்தில் நாளை வெள்ளிக்கிழமையன்று மனுத்தாக்கலை செய்யவுள்ளது.

இதில் மாவீரர்தின நிகழ்வை நடத்தக்கூடாது என மெட்ரோபொலிடன் பொலிசார் கூறுவதற்கான காரணத்தை கோரவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வெம்பிலி எரினாவில் நடைபெறவுள்ள மாவீர்தின நிகழ்வில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மற்றும் தமிழ்நாட்டின் அரசியல்வாதி ஆகியோர் உரையாற்றவிருக்கின்றனர். தடை

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேசியக்கொடியேற்றலுடன் நாளை மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

மாவீரர் எழுச்சி நாளுக்கான நிகழ்வுகள் நாளை காலை 8.00 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளன. பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றல், மலர்வணக்கம், அகவணக்கம், உறுதியுரையெடுத்தல், நினைவுரைகள் என்ற ஒழுங்கில் எழுச்சி நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.


மாவீரர் துயிலுமில்லங்களில் நாளை காலை எட்டு மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் முடிவடைந்ததும் இறக்கப்படும்.


பொது நிறுவனங்கள், பள்ளிகளில் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் பிற்பகல் 12.01 இருந்து பின் 6.00 மணிக்கு முன்பாக தேசியக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### *மாவீரர் நினைவுப் பிரசுரம் இணைப்பு*

மாவீரர் நினைவாக வர்ணப்பிரசுரம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.




## மாவீரர் நாள் நவம்பர் – 27

**"மாவீரர்நாள் எமது தேசத்தின் துக்கதினம் அல்ல; நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோக தினம் அல்ல. இன்றைய நாள், ஒரு தேசிய எழுச்சி தினம்; எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதிபூணும் புரட்சித்தினம்."**

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## கிளி. மருத்துவமனைக்கு இந்தியா மருந்துகள் அன்பளிப்பு

இந்தியத் தூதரகம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு ஒரு தொகுதி மருந்துகளை வழங்கியுள்ளன.

கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகத்தில் வைத்து நேற்று இம்மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தியும் கலந்து கொண்டார். இம்மருந்துத் தொகுதியில் நுண்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் நாள் - 2005

## மாவீரரின் பெற்றோருக்கான வாகன சேவை விபரம்

27.11.2005 மாவீரர் நிகழ்விற்கு மாவீரர் துயிலும் இல்லங்களிற்கு செல்லும் மாவீரர்களின் பெற்றோருக்கான வாகன சேவை விபரம் பின்வருமாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**1). வெளி மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிற்கு செல்லும் பெற்றோர்களிற்கான வாகன ஒழுங்கு (வன்னி)**

கீழ்குறிப்பிடப்படும் உள்ளூர் தரிப்பிடங்களிலிருந்து பிரதான தரிப்பிடங்களிற்கு காலை 6.00 மணி தொடக்கம் காலை 8.00 மணி வரை நடைபெறும். பிரதான தரிப்பிடத்திலிருந்து நேரடியாக துயிலும் இல்லங்களிற்கு காலை 8.00 மணி தொடக்கம் காலை 10.00 மணி வரை நடைபெறும் வன்னிக்கு அழைத்துச் செல்லப்படும்.

**2). யாழ். மாவட்டத்தில் உள்ள துயிலும் இல்லங்களிற்கு செல்லும் பெற்றோர்களிற்கான வாகன ஒழுங்கு**

யாழ். மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிற்கு கீழ் குறிப்பிடப்படும் உள்ளூர் தரிப்பிடங்களிலிருந்து காலை 11.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை நடைபெறும்.

**3). பிரதான தரிப்பிடங்கள்**

1)வலிகாமம், தீவகம், யாழ் நல்லூர்க் கோட்டங்களிற்கான பிரதான தரிப்பிடம்.
நல்லூர் கந்தசுவாமி ஆலயம்
2) வடமராட்சி கோட்டத்திற்கான பிரதான தரிப்பிடம்.
□நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
3) தென்மராட்சி கோட்டத்திற்கான பிரதான தரிப்பிடம்.
□கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

**4). உள்ளூர்த் தரிப்பிடங்கள்**

**வடமராட்சி கோட்டம்**

**கரவெட்டிப் பிரதேசம்**

விக்கினேஸ்வராக் கல்லூரி, வளர்மதி கரவெட்டி, காசிநாதர் வித்தியாலயம் துன்னாலை, அல்வாய் முத்துமாரி அம்மன் வித்தியாலயம், கப்பூது.

**உடுப்பிட்டிப் பிரதேசம்**

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, குஞ்சர்கடை, இமையாணன் சனசமூக நிலையம், முத்துமாரி அம்மன், கெருடாவில் கொண்டலடி, உடுப்பிட்டி மகளிர்.

**பருத்தித்துறைப் பிரதேசம்**

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி, பொலிகண்டி க.தொ.கூட். சங்கம், பருத்தித்துறை சிவன்கோவிலடி,கற்கோவளம் பாடசாலை, அம்பன் பாடசாலை, பொற்பதி குடத்தனை, மணற்காடு பாடசாலை, கிராமக் கோடு ப.நோ கூ. சங்கம், மந்திகை கல்வி வலயம்.

**தென்மராட்சிக் கோட்டம்**

**கொடிகாமப் பிரதேசம்**

வரணி மகாவித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி, மந்துவில் அ.த.க பாடசாலை, மிருசுவில் அ.த.க பாடசாலை, படித்தமகளிர் திட்டம், துர்க்கை அம்ம ் கோவிலடி, உசன் வைத்தியசாலை, விடத்தல்பளை அ.த.க பாடசாலை, கச்சாய் அம்மன் கோவிலடி, மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவிலடி, வடக்குவரணி இடைக்குறிச்சி, தவசிகுளம்.

**சாவகச்சேரிப் பிரதேசம்**

மட்டுவில் மகாவித்தியாலயம், றிபேக்கல்லூரி,சரசாலை கமலாசினி,சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை விக்கினேஸ்வரா, கல்வயல் கண்ணன் பாடசாலை, மோகனதாஸ் மட்டுவில், மு.சிறி. அம்மன் சனசமூக நிலையம்,மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன், கைதடி நுணாவில் சனசமூகநிலையம், நுணாவில் சந்தி.

**கைதடிப் பிரதேசம்**

நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி, கைதடி வடக்கு உதயசூரியன், நவபுரம் வடக்கு.

**வலிகாமக் கோட்டம்**

**உடுவில்பிரதேசம்**

தாவடி பிள்ளையார் கோவிலடி, கோவில் வாசற் சந்தி இணுவில், முருகமூர்த்தி பாடசாலை உடுவில்,இராமநாதன் கல்லூரி மருதனார்மடம், சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையம், ஸ்கந்தரோதயா கல்லூரி கந்தரோடை,தபாற்கந்தோர் சந்தி ஏழாலை, ஆயக்கடவை பிள்ளையார் கோவிலடி புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் சந்தி, சிறி முருகன் சனசமூக நிலையம்.

**யாழ். நல்லூர்ப் பிரதேசம்**

நாவாந்துறை பாடசாலையடி, பாசையூர் அந்தோனியார் கோவில், குருநகர் சமாச முன்றல், கொக்குவில் இந்துக்கல்லூரி, பாற்பண்ணை பாடசாலையடி, கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையம், ஆறுகால்மடம் சனசமூக நிலையம், கொழும்புத்துறை துண்டிச்சந்தி, அரியாலை சனசமூக நிலைய முன்றல்.

**சண்டிலிப்பாய் பிரதேசம்**

மாதகல் மாதா கோவில், பண்டத்தரிப்பு சந்தி, இளவாலை சந்தி, விளான் மாதா கோவில், சண்டி இரட்டைத்தலை வைரவர், சீரணி கோவில் சந்தி, கட்டுடை சந்தி, கட்டுடை சுபாஸ் சனசமூக நிலையம், நவாலி சென்பீற்றஸ் தேவாலயம், பள்ளங்காடு உதயதாரகை, சாவற்கட்டு சந்தி சனசமூக நிலையம், உயரப்புலம் நாயகி சனசமூக நிலையம்.ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடி.

**அச்சுவேலிப் பிரதேசம்**

ஆவரங்கால் சிவன், அச்சுவேலி பேருந்து நிலையம், எல்லாளன் சனசமூக நிலையம், ஈவினை சனசமூக நிலையம்.

**தெல்லிப்பளை பிரதேசம்**

அளவெட்டி ப.நோ.கூ. சங்கம், துர்க்கை அம்மன் கோவிலடி தெல்லி, பழம் பிள்ளையார் கோவில் மல்லாகம், உபதபாற்கந்தோரடி கட்டுவன்.

**கோப்பாய் பிரதேசம்**

புத்தூர் சோமஸ்கந்தர், உரும்பிராய் சைவத்தமிழ், உரும்பிராய் மூன்று கோவில், கோப்பாய் மகாவித்தியாலயம், இருபாலை கந்தசுவாமி கோவில், கோப்பாய் முருகன் கோவில், நீர்வேலி காமாட்சி சனசமூக நிலையம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி.

**சங்கானைப் பிரதேசம்**

அராலி இந்துக்கல்லூரி, வட்டு இந்துக்கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்கினேஸ்வராக் கல்லூரி,வட்டு மத்திய கல்லூரி, அராலி சரச வித்தியாலயம்.

**தீவகக் கோட்டம்**

**வேலணைப்பிரதேசம்**

சாட்டி சந்தி, செட்டி புலம் சந்தி, நேதாஜி சந்தி, மண்கும்பான், அல்லைப்பிட்டி, ஆதியடி வைரவர் கோவில், ஏ.பி.சி அலுவலகம், வங்களாவடி சந்தி, துறையூர் சந்தி, கெட்டில் சந்தி, கண்ணகைபுர சந்தி, முடிப்பிள்ளையார் கோவிலடி,சிப்பன் முருகன் கோவிலடி, வேலணை ப.தெ.கூ.சங்கம்,இலந்தக்காட்டு பிள்ளையார் கோவிலடி.

**ஊர்காவற்றுறைப் பிரதேசம்**

மெலிஞ்சிமுனை பாடசாலை, சுருவில் கிரா.முன் சங்கம்,கரம்பன் பாங்கட்டு சந்தி, அம்மாப்புலம் சந்தி, தம்பாட்டி வாசிகசாலை,நகர்ப்பகுதி அரசியல்துறை, புளியங்கூடல் அம்மன் கோவிலடி,சின்னமடு பாடசாலையடி, சரவணை சந்தி, நாரந்தனை வடக்கு, செல்லப்பா மைதானத்தடி செருங்கன் சந்தி.

**காரைநகர்ப் பிரதேசம்**

சைவமகாசபை

**புங்குடுதீவுப் பிரதேசம்**

உடுப்பட்டி சந்தி,பெருங்காட்டு சந்தி,அம்மாகடைச் சந்தி, மடத்து வெளிச் சந்தி,குறிகட்டுவான் யெற்றி.

**மாவீரர்நாள் ஏற்பாட்டுக் குழு**
**யாழ். மாவட்டம்**


## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**corel Draw**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போ வீதி, கிளிநொச்சி (சி.13074)

**மாவீரர் படங்கள்**
மூத்த மாவீரர்கள், முதன்மை மாவீரர் படங்கள் எம்மிடம் உண்டு
தொகுதி 30/= தொடர்பிற்கு
அறிவமுது பொத்தகசாலை (6937)

**கணனிப் போதனாசிரியர் தேவை**

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையினால் பளைப் பிரதேசத்தில் நடாத்தப் படும் கணனிப் பயிற்சி நிலையத் தில் கடமைபுரிவதற்கு தகுதிவாய்ந்த கணனிப் போதனாசிரியர் தேவை. சுயவிபரங்களுடன் விண்ணப்பிக் கவும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (சி.13385)

**13 ஆம் ஆண்டு நினைவலைகளில்**

மண்ணில் 03 - 05 - 1973
மண்ணுக்காக 24 - 11 - 1992



**லெப்ரினன்ட் கௌரி**
**(வீரகத்தி அமுதா)**

பெண்ணென்றும் பாராமல் தாக்கிய
அண்டை நாட்டு அந்நிய இராணுவத்தை
விரட்ட வீறு கொண்டெழுந்தாய்
மண்ணின் விடுதலைக்காய் பத்தமேனியில் வித்தாகி
பதின்மூன்று ஆண்டுகள் ஆனதோ?

திருமதி மகவதாஸ் -வளர்மதி
(6432) திருமதி- சிவகுமார் -சூட்டா(போராளிகள்)


## தமிழீழ மோட்டார் ஊர்தி பதிவு பகுதியினரின் நடமாடும் சேவை

தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினரால் இதுவரை தமிழீழப் பதிவு மேற்கொள்ளாத ஊர்திகளுக்கு நடமாடும் சேவை ஊடாக பதிவினை மேற்கொண்டு 2006 ஆம் ஆண்டிற் கான வரி அட்டையும் வழங்கப்பட வுள்ளது. இச்செயற்பாடானது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களில் குறிப்பிடப்படும் தினங்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெறவுள்ள தென தமிழீழ போக்குவரத்துப் பிரிவு வெளிக்கள பரிசோத னைப் பகுதி மேலாளர் தெரிவித் துள்ளார்.

வரும் 07.12.2005 முதல் 19.12.2005 நடைபெறவுள்ள இந் நடமாடும் சேவையில் 7.12.2005 நெடுங்கேணி, 8.12.2005 ஒட்டுசுட் டான், 9.12.2005 முள்ளியவளை, 10.12.2005 முல்லைத்தீவு, 11.12.2005 விசுவமடு, 12.12.2005 பளை, 13.12.2005 மருதங்கேணி, 14.12.2005 பூநகரி, 15.12.2005 முழங்காவில், 16.12.2005 இலுப்பைக்கடவை 17.12.2005 விடத்தல்தீவு, 18.12.2005 கனகராஜன் குளம், 19.12.2005 புளியங்குளம். ஆகிய செயலகங்களில் நடைபெறும்.

ஊர்தியினைப் பதிவு செய்யவரும் போது உரிமையாளர் பின்வரும் உரிமையாளர் பின்வரும் ஆவணங் களைச் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர்.

படம் அளவு பழைய கடவுச்சீட்டு (கறுப்பு வெள்ளை) குடும்ப அட்டை, ஆயப்பகுதி தீர்வைச்சான்று- நிழற் பிரதியுடன், சிறிலங்கா ஆவணங்கள் அனைத்தும் பிணையாளியுடன் குடும்ப அட்டையும் கொண்டு வருதல் வேண்டும், பதிவினை மேற்கொள்ள அலுவலகம் வரும் போது ஊர்தியி னையும் கொண்டு வருதல் வேண்டு மெனவும் தெரிவித்துள்ளனர்.(சோ)

## மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் உதவி

கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் கடும்மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் வெளிக்கள வைத்தியர்களின் உதவியோடு இடம் பெயர்ந்த மக்கள் வாழ்விடங்களில் நடமாடும் மருத்துவ சேவையை இரவு, பகல் தொடராக நடாத்தி நோயுற்றோருக்கான சிகிச்சைகளை செய்து வருகிறார்கள்.

கடந்த 22 ஆம் திகதி நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் நடமாடும் மருத்துவ சேவை பாரதிபுரம் பாடசாலை, திருமுறிகண்டி பாடசாலை, பரந்தன் காஞ்சிபுரம், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் 520 நோயாளர் களுக்கு சிகிச்சை வழங்கியுள்ளது.

மேற்படி நிறுவனம் மக்களுக்கு தொற்று நோய் பாதுகாப்பு விதிமுறைகளை விளக்க துண்டுப்பிர சுரம் தயாரித்து மக்களுக்கு விநியோ கித்துள்ளனர்.

நடமாடும் சேவைப் பணி தொடர்கிறது மக்கள் கொதித்தாறிய நீரைப் பருகி, ஈ மொய்க்காத உணவு களை உண்டு, பாதுகாப்பாக மனித கழிவு அகற்றுதலைச் செய்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாத்து வாழ வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர். (சோ)

# பட்டினி, ஊட்டச்சத்து குறைவால் ஆண்டுக்கு 60 இலட்சம் குழந்தைகள் பலி

## உணவு வேளாண்மை அமைப்புத் தகவல்

(ரோம்)

**பட்டினி மற்றும் ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் நோய்களுக்கு உலகம் முழுவதும் ஆண்டுக்கு 60 இலட்சம் குழந்தைகள் பலியாவதாக உணவு வேளாண்மை அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.**

ஏழை மற்றும் வளரும் நாடுகளில் குழந்தைகள் இறப்புக் குறித்து ஆண்டு அறிக்கையை உணவு வேளாண்மை அமைப்பு வெளியிட்டது. 2115 ஆம் ஆண்டுக்குள் உலகில் இருந்து பட்டினியை விரட்டும் மில்லினியம் குறிக்கோளை அடைவதில் உலக நாடுகள் மிகவும் பின் தங்கி விட்டன.

இந்த நிலை தொடர்ந்தால் குறிக்கோளை தென் அமெரிக்கா, கரிபியன் கடல்நாடுகள் மட்டுமே அடைய முடியும். பட்டினி மற்றும் ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் நோய்களுக்கு உலகம் முழுவதும் ஆண்டுக்கு 60 இலட்சம் குழந்தைகள் பலியாகின்றனர். பட்டினியால் மட்டுமன்றி மலச்சிக்கல் நிமோனியா, மலேரியா காய்ச்சல்கள், அம்மை ஆகியவற்றாலும் இந்த உயிர்ப் பலி ஏற்படுகிறது.

இந்த நிலையை மாற்றவும், மில்லினியம் குறிக்கோளை அடையவும் ஏழை மற்றும் வளரும் நாடுகள் விரைவாகப் பணியாற்ற வேண்டியது அவசியம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



டுபாயில் நடந்த விமானக் கண்காட்சியில் சாகசம் செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவ விமானங்களைப் படத்தில் காணலாம்.



ஜேர்மனி பாராளுமன்றத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏஞ்சலா மெர்கிலா மலர்ச்செண்டுடன் காணப்படுகிறார்.

# ஜேர்மனியின் பெண் அதிபர் பதவி ஏற்பு

(பேர்லின்)

ஜேர்மனியில் நடந்த அதிபர் தேர்தலில் எந்தக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதைத்தொடர்ந்து ஏழு ஆண்டு காலம் அதிபராக இருந்த ஜெரார்டு ஷிரோடரின் சமூக ஜனநாயக கட்சியும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியும் பேச்சுவார்தை நடத்தியது. கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் சார்பில் ஏஞ்சலா மார்க் கெல் என்ற பெண் புதிய அதிபராக பாராளுமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டணி ஆட்சிக்கு தலைமை ஏற்றிருக்கும் 51 வயது ஏஞ்சலா மார்க்கெல் ஜேர்மனியின் முதலாவது பெண் அதிபர்.

# பறவைக்காய்ச்சல் பீதி காரணமாக கனடா நாட்டு பறவைகளுக்கு அமெ.தடை

(ஒட்டாவா)

பறவைக்காய்ச்சல் நோய் வேகமாகப் பரவி வருவதைத் தொடர்ந்து அது ஏற்படுத்திய பீதி காரணமாக கனடா நாட்டில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தில் இருந்து கோழி மற்றும் பறவைகள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

"அந்த ஒரு மாநிலத்தைத் தவிர கனடாவின் பிற மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்வதற்கு தடை எதுவும் கிடையாது" என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

கனடாவில் இருந்து ஜப்பானுக்கு அனுப்பப்பட்ட ஒருவாத்தின் உடலில் நோய்க் கிருமி தொற்றி இருந்ததால் கனடா நாட்டில் இருந்து பறவைகளை இறக்குமதி செய்வதற்கு ஜப்பான் தடை விதித்துள்ளது.

தைவான், கொங்கொங் ஆகியவையும், கனடா நாட்டுப் பறவை இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளன.

# மீண்டும் பிரதமராவார் ஷெரோன் கருத்துக் கணிப்பில் புதிய தகவல்

(ஜெருசேலம்)

புதிய கட்சி தொடங்கியுள்ள இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராகும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் அந்நாட்டு அரசியலில் மிகப் பெரும் செல்வாக்கு பெற்றவர். காஸா பகுதிலிருந்து இஸ்ரேலியர்களை கடைகள் திருப்பப் பெற்றது தொடர்பாக அவரது சொந்தக் கட்சிக்குள் அவர் மீது கடும் அதிருப்தி ஏற்பட்டது. இதனையடுத்து கட்சியை விட்டு வெளியேறி புதுக் கட்சி ஆரம்பித்துள்ளார். மேலும் இஸ்ரேல் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு புதிதாக தேர்தல்கள் நடத்துவதற்கும், அதிபரிடம் பரிந்துரை செய்தார். ஷெரோனின் இந்த பரிந்துரையை அதிபரும் ஏற்றுக் கொண்டுள்ளார். வரும் பெப்பரவரி அல்லது மார்ச் மாதத்தில் அங்கு தேர்தல் நடைபெறும் என்று தெரிகிறது. இந் நிலையில் ஷெரோனின் புதிய கட்சிக்கு ஆதரவு எவ்வாறு உள்ளது என்பது குறித்து உடனடியாக கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது.

இதில் ஷெரோனுக்கு ஆதரவு அதிகரித்திருப்பது தெரியவந்தது. இஸ்ரேல் நாடாளுமன்றில் மொத்தமுள்ள 120 இடங்களில் ஷெரோனின் புதிய கட்சி 30 முதல் 33 இடங்கள் வரைக் கைப்பற்றும் அது கூட்டணி அரசின் மிகப் பெரும் அணியாக அமைவதோடு மூன்றாவது முறையாக ஏரியல் ஷெரோன் அதிகாரத்தைக் கைப்பற்ற வழிவகுக்கும் என்றும் அந்தக் கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

# டிஸ்கவரி கைவிடப்படும் அபாயம்

(கேப்கனவரால்)

அமெரிக்க டிஸ்கவரி விண்கலத்தின் எரி பொருள் கொள்கலனில் திடீர் கோளாறு ஏற்பட்டது.

அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி நிறுவனம் கடந்த சில மாதங்களுக்கு முன்பு டிஸ்கவரி விண்கலத்தை விண்வெளியில் பறக்க விட்டபோது அதன் சில பாகங்கள் உடைந்து கீழே விழுந்தன. ஆனாலும் டிஸ்கவரி வெற்றிகரமாகப் பயணத்தை முடித் துக் கொண்டு பூமிக்கு திரும் பியது தெரிந்ததே. இப்போது அந்த டிஸ்கவரியில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்போது அந்த டிஸ்கவரியின் எரிபொருள் கொள்கலனில் பெரியளவில் சேதம் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உடைந்து விழுந்த பாகங்களில் மோதியதால் எரிபொருள் கொள்கலனில் கவச உறையில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அதைச் சரி செய்ய முடியுமா என்பது குறித்து நிபுணர்கள் ஆய்வு நடத்தி வருகிறார்கள். இந்தக் கோளாறு காரணமாக டிஸ்கவரி கைவிடப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# தாய்லாந்தும் மலேசியாவும் வாய்ச் சண்டையை நிறுத்தின

(பாங்கொக்)

வாய்ச் சண்டையை நிறுத்திக் கொள்ள தாய்லாந்தும் மலேசியாவும் நேற்று முன்தினம் முடிவு செய்தன.

அண்டை நாடுகளான மலேசியாவும், தாய்லாந்தும் ஒன்றை ஒன்று தினமும் குற்றம் சாட்டிவந்தன. முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் தாய்லாந்தின் தெற்குப்பகுதியில் ஏற்பட்ட கலவரங்களால் எல்லையோர மலேசியப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டனர். இதனையடுத்து தாய்லாந்தை மலேசியா குறைகூறி வந்தது. பதிலுக்கு மலேசியா மீது தாய்லாந்து அரசு குற்றம் சாட்டி வந்தது.

இருதரப்பும் தினசரி அறிக்கைப்போர் நடத்தி வந்தன. இந்த வாய்ச் சண்டையை நிறுத்திக்கொள்ள இரு நாடுகளும் முடிவுசெய்துள்ளதாக மலேசியப் பிரதமர் மகாதிர் முகமது நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கத்திக் கத்தி சண்டை போடுவதால் இருதரப்பிலும் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படப் போவதில்லை. அமைதியாக பேச்சு நடத்தி பிரச்சினையைத் தீர்க்க முடிவு செய்துள்ளோம். இனி மேல் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்வதில்லை என்று நாங்கள் உறுதி கொண்டுள்ளோம் என்று மகாதிர் கூறினார்.



உலகில் அதிகூடிய பருமனுடைய பறவை என்ற சிறப்பைக் கொண்ட தீக்கோழியே இது. ஆறடி உயரம் கொண்ட இந்தத் தீக்கோழிகள் இந்தோனேஷியா நாட்டைச் சேர்ந்தவை.

# குறட்டையைத் தடுக்க வின சிகிச்சை அமெரிக்க மருத்துவர்கள் சாதனை

(நியூயோர்க்)

தூங்கும் போது பலமாக குறட்டை விடுவது சிலருக்குப் பழக்கம். குறட்டையால் பல தொல்லைகள். பக்கத்தில் படுத்திருப்பவர்களின் தூக்கத்தை குறட்டைச் சத்தம் கெடுப்பது மட்டுமன்றி குறட்டை விடுபவர்களுக்கு சில உடற்கோளாறுகளுக்கும் இது அறிகுறி என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

குறட்டையைத் தடுக்க சிலர் மூக்கில் சத்திரசிகிச்சை செய்து சரி செய்து கொள்கிறார்கள். அமெரிக்காவின் புருக்லின் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் சார்ல்ஸ் கிம்மெல்சன் குறட்டையைத் தடுக்க புதிய சிகிச்சை முறை ஒன்றைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். வலைபோன்ற மூன்று தகடுகளை சத்திரசிகிச்சை மூலம் தொண்டையில் செலுத்தி இந்த சிகிச்சையை அவர் அளிக்கிறார்.

'பில்லர் பலேட்டல் இம்பிளாண்ட்' என்ற இந்த சிகிச்சைக்கு அதிகபட்சமாக ரூபா இரண்டு இலட்சம் வரை செலவு ஆகுமாம். ஒன்பது ஆயிரத்திற்கும் மேற் பட்டவர்களுக்கு இந்தச் சிகிச்சையை அவர் அளித்திருக்கிறார்.

# சி.ஐ.ஏ யின் உளவு முகாம்கள் சம்பந்தமாக அமெ.விடம் விபரம் கோருகிறது ஐரோ. யூனியன்


கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்காவின் உளவுச் சேவையான சி.ஐ.ஏ நடந்துகின்ற இரகசிய முகாம் சம்பந்தமாக ஐரோப்பிய யூனியன் அமெரிக்காவிடம் விபரம் கோரியுள்ளது.

இந்த அறிக்கை சம்பந்தமாக அமெரிக்கா உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ இல்லை. இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அமெரிக்காவில் இந்த மாத ஆரம்பத்தில் பேசப்பட்டது. ஐரோப்பிய உளவுத் துறை அமெரிக்காவின் இரகசிய முகாம்கள் அமைந்திருக்கும் போலந்து, ருமேனியா ஆகிய இடங்களின் விபரங்களை சட்டலைற் தொழில் நுட்ப மூலம் தகவல்களைப் பெறுகின்றது.

சி.ஐ.ஏ அதிகாரிகள் பயங்கரவாத சந்தேக நபர்களை விமானம் மூலம் எடுத்துச் செல்லும் போது தமது நாட்டில் தரித்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் இது சம்பந்தமான புரம்பான அறிக்கைகளினை ஸ்பெயின், அல்டன், ஐஸ்லாண்ட் போன்ற நாடுகள் எதிர்பார்க்கின்றன.

# மழை வெள்ளத்தால் 6000இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்

# புதுக்குடியிருப்பு, தருமபுரப்பகுதியில் பாதிப்பு


(புதுக்குடியிருப்பு)

**கடந்த சில தினங்களாகப் பெய்த கனமழை காரணமாக புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆறாயிரம் குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் செ.தயானந்தா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.**

இதேவேளை பலநூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் இவற்றில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 160 அங்கத்தவர்கள் இரணைப பாலை பாடசாலையில் தங்கியுள்ளார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்களின் சகல விபரங்களும் எடுக்கப்பட்டுவருவதாகவும் இப்பகுதியில் நெற்செய்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இக்கனமழை காரணமாக கால்நடைகளும் பெருமளவில் அழிந்துள்ளது எனவும் குறிப்பிட்ட அவர் பெருமளவான வீதிகள் சேதமடைந்துள்ளது எனவும் இவ்வீதிகளை உடன் புனரமைப்பதற்கு முப்பது இலட்சம் ரூபாவுக்கு மேல் தேவை எனவும் உடன் புனரமைப்பு வேலைகள் செய்யாவிடின் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இக்கனமழை காரணமாக வீதி அபிவிருத்தித்திணைக்களத்துக்கு உட்பட்ட வீதிகளுக்கு மேலாக வெள்ளம்பாய்ந்து கொண்டு உள்ளதால் உடனடியாக சேதவிபரங்களைப் பெறமுடியவில்லை என முல்லை மாவட்டவீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் வே.சிவனடியார் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணப்பணிகளை மேற்கொள்வதில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டுள்ளது.

மேலும் கடந்த 21 ஆம் திகதி வெள்ளத்தால் தத்தளித்த மக்களை ஏற்றி இறக்கும் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர்.

தேவிபுரம் பகுதியில் பாதிப்புக்குள்ளானவர்கள் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபருடனும் புதுக்குடியிருப்புப் பிரதேசப்பொறுப்பாளருடனும் தொடர்பு கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த சில நாட்களாக பெய்துவரும் கடும்மழை வெள்ளம் காரணமாக தருமபுரம் பகுதி மக்களின் வீடுகள் பல முற்றாக சேதமடைந்ததனால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அண்மைக்காலமாக பெய்துவரும் கடும்மழையை அடுத்து நேற்று முன்தினம் வரை தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு ஆகிய பகுதிகளை ஊடறுத்து கல்மடுக்குளத்திலிருந்து வெளியேறிய நீர் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இதனால் அப்பகுதிகளில் அமைந்திருந்த மக்களின் குடியிருப்புக்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதன்போது அப்பகுதி மக்கள் பெரும் சொத்திழப்புக்களையும் எதிர்நோக்கியதோடு குடியிருக்க இருப்பிடமின்றி தருமபுரம் பாடசாலையில் தஞ்சமடைந்தனர். நேற்று முன்தினம் வரை சுமார் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருப்பிடங்களை இழந்தநிலையில் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளன. இவர்களுக்கு தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தினர் சமைத்த உணவுகளை வழங்கிவருகின்றனர்.

இங்கு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பல வர்த்தக நிலையங்களுக்குள்ளும் நீர் உட்புகுந்ததால் பலத்த சேதங்கள் ஏற்பட்டதோடு வர்த்தக நிலையங்கள் சில இடிந்து வீழ்ந்துள்ளன. (ச,08)

*–முகாம்களில் தங்கியுள்ள மக்கள்*

## சுகாதாரவிதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு சுகாதார சேவையினர் வேண்டுகோள்

(அலுவலக செய்தியாளர்)

வெள்ள அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களை சுகாதாரவிதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் வண்ணம் தமிழீழ சுகாதாரசேவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.

மக்கள் அனைவரையும் கொதித்தாறியநீரைப் பருகுவதுடன் உணவுகளை மூடிவைத்து உணவினை உட்கொள்வதற்கு முன்பதாகச் சூடுகாட்டி உட்கொள்ளுமாறும் வேண்டியுள்ளதுடன் மலசலம் கழிக்கும் இடங்களைத்துப்புரவாகவும், சுகாதாரத்திற்கேற்ற வகையில் பாதுகாப்பாகவும் பேணும் வண்ணம் வேண்டியுள்ளனர். அத்துடன் வயிற்றோட்டம், வயிற்றுளைவு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பின் உடன் மருத்துவ ஆலோசனையினைப் பெற்றுக்கொள்ளுமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டியுள்ளனர். (சோ)

## "சுகாதாரம் பேணி வருமுன்காப்போம்" தமிழீழ சுகாதர சேவையின் தீவிரம் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தற்சுகாதாரத்தைப்பேணி வருமுன் காப்போம் நடவடிக்கையில் தமிழீழ சுகாதாரசேவையினர் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முதற்கட்டமாக கிளி, முல்லை மாவட்ட நகரப்பகுதிகள் எங்கும் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பது தொடர்பாகவும் மற்றும் சுகாதார விழிப்புணர்வு கருத்துக்களடங்கிய பதாகைகள் தமிழீழ சுகாதாரப் பகுதியினரால் கட்டப்பட்டுவருவதுடன் அடுத்தநடவடிக்கையாக மேற்படி பதாகைகள் கிராமப்புறங்களிலும் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழீழ சுகாதர சேவைப் பொறுப்பாளர் காவலியன் தெரிவித்துள்ளார்."சூழலை நீஅழித்தால்" சூழல் உன்னை அழிக்கும் இவைபோன்று பலதரப்பட்ட கருத்துக்களைக் கொண்ட பதாகைகள்கட்டப்பட்டு வருகின்றமை குறிப்படத்தக்கது. (சோ)

## கியூடெக், ஹரித்தாஸ் நிறுவனத்தினால் படகுகளும், வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கல்

(முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் ஒரு தொகுதியினருக்கு கடந்த திங்கட்கிழமை கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கசமாசத்தில் வைத்து 200 படகுகளும்,50 வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கலவிளக்கினை கியூடெக் கரித்தாஸ் நிறுவன கிளி.முல்லை பணிப்பாளர் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைநகரத் தளபதி தினேஷ் ஏற்றினார்.

தொடர்ந்து கருத்துரைகளை கியூடெக் கரித்தாஸ் நிறுவன கிளி.முல்லை பணிப்பாளர் அருட்தந்தை பீற்றர் அடிகளார், முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா ஆகியோர் வழங்கினார்கள்.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட 200 படகுகளில் 150 படகுகளுக்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன 50 வெளியிணைப்பு இயந்திரங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இரண்டாம் கட்டமான நடவடிக்கைகளில் 200 படகுத்தொகுதிகள் மட்டும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன. (20)

## கூட்டுறவு சங்கங்களில் உணவுப்பொருட்கள் சேதம்

(அலுவலக செய்தியாளர்)

தற்போது ஏற்பட்ட மழைவெள்ளம் காரணமாக கிளிநொச்சி மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் விற்பனை நிலையங்களுக்குள் வெள்ளம் புகுந்ததன் விளைவாக விற்பனை நிலையங்களிலிருந்த உலர் உணவுப்பொருட்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன்காரணமாக கூட்டுறவுச்சங்கங்களுக்கு பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐந்தரை இலட்சத்திற்கு மேலாகவும், கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு ஏழுஇலட்சம்ரூபாவும், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 15 இலட்சம் ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மேறபடி சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)




மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. அதன் ஒரு கட்டமாக வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவினைப் படத்தில் காணலாம். (படம் : சசி)

# தமிழீழ மாவீரர் நாள் – 2005

தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரியின் பாசறையை
வெடி குண்டு கொண்டு தகர்த்தும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
உயிரினை ஈந்து
உடலினை உரமிட்டு
செங்குருதியால் வரலாறு படைத்து
தமிழீழ மண்ணெங்கும்
நினைவுச்சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய வேதங்களாய்
ஈழமண்ணில் புது விதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவார்.

ஏன் இவர்கள் மாவீரர்கள்
தமிழ் இன விடிவிற்காய் மரணித்தவர்கள்
தேசம் தூங்கிய போது விழித்திருந்தவர்கள்
உணர்வுத் தீக்களை தமக்குள்ளே சிறை
போட்டவர்கள்
தேச மக்களின் பாச பிணைப்புக்காக
தமது பாசங்களைபொசுக்கியவர்கள்.
பள்ளிப் பராயத்தை பள்ளித் தோழருக்காய்
பறிகொடுத்தவர்கள்
ஊரெல்லாம் உறங்கும் வேளை
உறக்கமின்றி விழித்தவர்கள்
எல்லைசுற்றி வெளிச்சிலையாய்
நின்றவர்கள்
தமது மக்களுக்காய் கால்களை,
கரங்களை
இழந்து நின்றவர்கள்.



தமிழீழ மாவீரர் பணிமனை.

## பாரியவளப்பற்றாக்குறையுடன் இயங்கிவரும் யாழ்.விவசாயத்திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களம் பாரிய வளப்பற்றாக் குறைகளுடன் இயங்கிவருவதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இதனால் விவசாயத் திணைக் களத்தின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும். இது யாழ்.குடாநாட்டின் விவசாய முன் னேற்ற நடவடிக்கைகளை பெரிதும் பாதித்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.

குறிப்பாக விவசாய உபகர ணங்கள் மற்றும் பயிற்சிக்கூடங்கள் பராமரிப்பாளர்கள், விவசாய நுட்ப முறை பயிற்றுவிப்பாளர்கள். அலு வலர்கள் என விவசாயத் திணைக் களத்தில்60வீதமான ஆளணிப் பற்றாக்குறை நிலவிவருகிறது.

இதனால் விவசாயிகளுக்கு பயிற் சிகளை வழங்கல்,விவசாய திணைக் களத்தின் ஊடாக விவசாயிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை திருப்திகரமாக முன்னெடுக்க முடியாதுள்ளது என்றும்இது பற்றி மேலிடங்களுக்கு பல தடவை அறிவித்திருந்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் அதிகாரிகள் மேலும் கூறினர். (33)

-யாழ்.நெடுந்தீவில் -

## கடற்படையால் கைதான ஏழு பேரும் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவுப்பகுதியில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காணாமல்போன சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின்போது கடற்படை யினரால் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட வர்களில் ஏழு இளைஞர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட் டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட இவ் ஏழு பேரும் தத்தமது இடங் களிலுள்ள பொலிஸ் நிலையங் களுக்கு தினமும் சென்று கை யொப்பம்இடவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. (33)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு சிறந்த மரநடுகைத்திட்டம் அவசியம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட யாழ். வடமராட்சி கடற்கரை யோரப்பிரதேசங்களில் சிறந்த மர நடுகைத்திட்டங்களை அமுல் படுத்துவது அவசியமென சுற்றுச்சூழல் துறைசார் வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ். வடமராட்சிக் கடற்கரை யோரங்களில் ஏற்கனவே நின்ற பனை,தென்னை மற்றும் சவுக்கு, தாழை போன்ற கடற்கரை யோரத்தில் வளரக்கூடிய மரங்கள் மற்றும் கண்டல் தாவரங்கள், செடிகள் என்பன சுனாமி ஆழிப்பேர லையால் அழிக்கப்பட்டும், அடித்துச் செல்லப்பட்டும் விட்டன.

இதனால் இப்பிரதேசக்கடற்கரை யோரங்களில் மண்ணரிப்பு அதிகம் ஏற்படவும், கடற்கரையோர பகுதி களில் கடல் நீர் புகுந்து விடவும் சாத்தியப்பாடுகள் உள்ளன.

இந்த அபாயகரமான சூழ் நிலையைச் சுட்டிக்காட்டியே சுனா மியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கடற்கரையோரங்களில் சிறந்த மரநடுகைத்திட்டங்களை அமுல் செய்யவேண்டும் என சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

எனினும்சுற்றுச்சூழல்அதிகார சபையோ அல்லது சுற்றுச் சூழலைப் பேணுதல் என்ற பெயரால் செயற் படும் தொண்டர் அமைப்புக்களோ இதுவிடயத்தில் கவனம் கொள்ளாது இருந்து வருகின்றனர். இதனால் வட மராட்சிக் கடற்கரையோரங்கள் பலவும் மண்ணரிப்பினால் பாதிப் படையக் கூடிய அபாயம் உள்ள தாகவும்சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

## வேலை வழங்குமாறு கோரி வேலையற்ற பட்டதாரிகள் மகஜர்

யாழ்ப்பாணத்தில் வேலையற்று இருக்கும் பட்டதாரிகள் தமக்கு வேலைவழங்காமை பற்றி மீண்டும் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு நல்லூர் கல்வி அலுவல கத்துக்கு அண்மையாகவுள்ள தேவா லயங்களில் கூடி கலந்துரை யாடியுள்ளார்கள்.

இக் கலந்துரையாடலில் நூற் றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து கொண்டார்கள். தருமராசா மோகனதாஸ் தலைமையில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் முதல் கட்டமாக யாழ்ப்பாணம் அர சாங்க அதிபர், வடக்கு கிழக்கு மாகாணகல்வியமைச்சின் செய லாளர், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட கல்விவலயங் களின் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தமதுமகஜர்களைஅனுப்பிவைப்ப தெனதீர்மானித்துள்ளார்கள். (41)

## ஹாட்லிக் கல்லூரி மாணவன் கயிற்றில் இறுகி மரணம்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆறாம்தர மாணவன் கழுத்தில் நைலோன் கயிறு இறுகித் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் அங் கொல்லை புலோலிமத்தி பருத்தித் துறையில் அமைந்துள்ள அவரது வீட்டின் பின் புறமுள்ள கொட்டகையில் ஏற்கனவே கட்டிய நிலையில இருந்த நைலோன் கயிற்றில் விளையாடிக்கொண்டி ருந்தவேளை தவறுதலாக கயிற்றி னுள் சிறுவனின் கழுத்துப் பகுதி மாட்டிய தாலேயே இம்மரணம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

மரணமானவர் சோதிலிங்கம் ராகவன்(வயது-11) பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆறாம்தர மாணவரெனத் தெரிவிக் கப்படுகிறது. (கா)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(வலிகாமம்)

பொன்னாலை இராணுவ ஆக்கிரமிப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சமீபத்தில் உதவு பொருட்களை வழங்கியுள்ளது.கடந்த 1990ஆம் ஆண்டு முதல் பொன்னாலையில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அயற் கிராமங்களான மூளாய், முன்கோடை, தொல் புரம்,சுழிபுரம், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

இப் பகுதிகளில் வசித்துவரும் மக்களுக்கே சமீபத்தில் மூளாயில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவு பொருட்களை வழங்கி யுள்ளது.உணவல்லாத பொருட்களான பிளாஸ்ரிக் பாய்கள், சமையல் பாத்திரங்கள்,மண்[illegible]அடுப்பு, உடுதுணி வகைகள், அரிக்கன் லாம்பு போன்ற பொருட்[illegible]ழங்கப்பட்டன. (37)

## ஈ.பி.டி.பி முகாம்களுக்கு பாதுகாப்பு வழங்க சிறிலங்கா பொலிசார் பின்னடிப்பு

யாழ்.. குடாநாட்டில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகங்களில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடு வதற்கு பொலிசார் பின்னடிப்பதாக யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டிலுள்ள ஈ.பி.டி.பியினரது அலுவலகங்கள் மீது இனந்தெரியாத நபர்களினால் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை இலக்கு வைத்து இத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்ற போதும் அவர்களது அலுவலங்களுக்கு முன்னாலுள்ள அரண்களில் நின்று காவல் கடமை யில் ஈடுபடும் பொலிசாரே உயிரிழக் கவும், காயங்களுக்குள்ளாகவும் நேரிடுகிறது.

எனவே ஈ.பி.டி.பி அலுவலகங் களில் காவல் கடமையில் ஈடு படுவதானால் தமக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல்களைக் காரணம்காட்டியே அவர்களது அலு வலகங்களுக்குச் சென்று பாதுகாப்பு கடமையில் ஈடுபட பொலிசார் பின் நிற்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றபோதும் உயர் மட்டங்களில் இருந்து கிடைக்கின்ற அதிகாரபூர்வ உத் தரவுகளை ஏற்று அவர்களை வலுக் கட்டாயமாக ஈ.பி.டி.பி அலவலகங் களுக்குச் சென்று பணியாற்றுமாறு பணிக்க வேண்டிய சூழல் உள்ள தாகவும் அவர்கள் மேலும் கூறு கின்றனர். (33)

- படையினரின் கொலை அச்சுறுத்தல் -


## மனித உரிமை குழுவிடம் இரு யாழ். பெண்கள் முறையீடு

சில நாட்களிற்கு முன்னதாக ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து, தம்மை உளவியல் ரீதியாக படையினர் துன்புறுத்தினர் என்று யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த யுவதிகள் இருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இந்த இரு பட்டதாரி யுவதிகளும் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது, திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் கடந்த 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை பட்டதாரி களுக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி திரும்பி வந்து கொண்டிருந்தோம். ஓமந்தைச் சோதனைச் சாவடியில் படையினர் எங்களை மூன்று மணிநேரம் தடுத்து வைத்திருந்து எமது பொருட்கள் யாவற்றையும் துருவித்துருவி சோதனையிட்டனர். அதன் பின்னர் எங்களைப்படம் எடுத்துக்கொண்டனர். நாம் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என ஒத்துக்கொள்ளு மாறு வற்புறுத்தினர். தடுத்து வைத்திருந்த சமயம் உளவியல் ரீதியாக எம்மைத் துன்புறுத்தினர்.

அத்துடன் எமது தொலைபேசி இலக்கங்களையும் பதிவு செய்த படையினர் எமக்கு தொலைபேசியூடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கின்றனர். எனவே படையினரால் எமக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலில் இருந்து எம்மைப் பாதுகாக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினரைக் கேட்டுக்கொள் கின்றோம் என அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

# சனாதிபதித் தேர்தல் பிரிந்துள்ள ஒரு நாட்டை தத்ரூபமாக எடுத்துக் காட்டியுள்ளது



**சனாதிபதி** மகிந்தராஜபக்ஷ தனது சனாதிபதி சத்தியப்பிரமாணத்தின் பின் தான் எந்தக்கட்சிக்கும் குழுக்களுக்கும் சொந்தமானவர் அல்ல. தான் இலங்கையில் உள்ளசகல பொது மக்களுக்கும் சொந்தமானவன் என்று கூறியுள்ளார். இது நல்லதொரு ஆரம்பமாகும். அத்துடன் எதிர் காலத்தில் முகம் கொடுக்கப்போகும் சவால்களை வென்று வெற்றிகரமாக ஆட்சியை நடத்துவதே அவரின் முக்கிய குறிக்கோளாகும். பொதுத்தேர்தல் அல்லது சனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுப்பது வேறுவிடயமாகும். ஆனாலும் சனாதிபதித் தேர்தலில் வென்று நாட்டை ஆட்சிபுரிவது வேறு விடயமாகும். பொதுத்தேர்தலின்போது தனது வாக்குகளை அதிகரித்துக் கொள்வது எப்படி என்று அந்தவேட்பாளர் இயன்றளவு முயற்சி செய்து வாக்குகளை சேகரித்துக் கொள்வதில் ஈடுபடுவார். ஆனால் ஒரு நாட்டை ஆட்சிபுரியும் பொழுது இது முற்றிலும் வேறுபட்டதாக அமையும்.

சனாதிபதி மகிந்தராஜபக்ஷ பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவராக உள்ளார் என சனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட சிறிதுங்க ஜயசூரிய கூறியுள்ளார். அவர் ஒரு கட்சியின் ஆதரவைப்பெற்று சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட வில்லை. சகலமக்களின் ஆதரவைப் பெற்று சனாதிபதியாகியுள்ளார் என அவர் கூறியுள்ளார். ஆனால் சனாதிபதித்தேர்தல் பிரிந்துள்ள ஒரு நாட்டின் நிலையை தத்ரூபமாக எடுத்துக்காட்டியுள்ளது. ஒவ்வொரு குடிமகனும் இத்தேர்தலில் தங்களது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். சிங்கள பெரும்பான்மை இனமக்கள் மகிந்த ராஜபக்ஷவை இத்தேர்தலில் ஆதரித்துள்ளனர். ஆனால் தமிழ் மக்கள் ராஜபக்ஷவை நிராகரித் துள்ளனர். முஸ்லிம் மக்களும் மலையக மக்களும் ,வேறுவிதமாக தீர்ப்பளித் துள்ளனர். அதேநேரத்தில் கிறிஸ்தவர் களும் தமது நிலைப்பாட்டை இத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர். ஆகவே மகிந்தராஜபக்ஷ தற்பொழுது பெரும் சவால்களை எதிர் நோக்கியுள்ளார். பிரிந்துள்ள ஒரு நாட்டையே தற்பொழுது மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றுள்ளார். ஆகவே பெரும்பான்மை மக்களின் ஆதரவு கிடைத்துள்ள அதே வேளையில் சிறுபான்மை இனத்த வர்களின் ஆதரவு இவருக்கு கிடைக்க வில்லை. எனவே சிறுபான்மை இனத் தவர்களை ஒன்று திரட்டி அவர்களின் ஆதரவைப்பெறுவது மிக முக்கிய மானதாகும். இல்லையேல் நாடு பிளவு படுவதை இவரால் தடுக்கமுடியாது.

சனாதிபதித்தேர்தலின் பொழுது தெரியாத சவால் ஒன்று மறைந்துள்ளது. அதாவது 1988ஆம் ஆண்டு சனாதிபதி ஆர் பிரேமதாஸ முகம் கொடுத்த சவாலுக்கு சமமானதாகும். அன்றைய தேர்தலின் பொழுது பிரேமதாஸ 51 சதவீதம் வாக்குகளை பெற்றிருந்தாலும் அவருக்கு 27 சதவீத நிரந்தர வாக்குகள் மட்டும் கிடைத்துள்ளன. அதேநேரத்தில் மகிந்தராஜபக்ஷவுக்கு 36 சதவீத சொந்தவாக்குகள் இத்தேர்தலின் பொழுது கிடைத்துள்ளன. ஏனைய வைகள் யாவும் மற்ற இனத்தவர்களின் வாக்குகளாகும். அன்று பிரேமதாஸ குறைந்த வாக்குகளைப் பெற்று சனாதிபதியாகினார். ஆனால் குறுகிய கால ஆட்சியில் நாட்டின் பல விரோதங்களுக்கு முகம் கொடுத்தார். இதை தற்போதைய சனாதிபதி ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அவருக்கு நன்மைதரும் ஜனசவி வேலைத் திட்டங்கள், 200 தொழிற்சாலைகள், இந்தியப்படைகளை வெளியேற்றுவது போன்ற தேர்தல் உறுதிமொழிகளை அவர் நிறைவேற்றினார். ஆனாலும் அவருக்கிருந்த எதிர்ப்புக்கள் குறைய வில்லை. அவர் முழுமக்களின் ஆதரவைப் பெறவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது.

மகிந்தராஜபக்ஷ சனாதிபதியாக வெற்றி ஈட்டியதும் ஆர்.பிரேமதாஸ வெற்றியீட்டியதும் சமம் எனக்கருதலாம். இருவரும் பிரதமர் பதவியை வகித்தபின் சனாதிபதியானவர்கள் இருவருக்கும் சனாதிபதித் தேர்தலின் பொழுது தமது கட்சியின் முழு ஆதரவுகள் கிடைக்கவில்லை. மற்றும் ஊடகங்களின் ஆதரவுகள், வணிகர்களின் ஆதரவு, சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவு கிடைக்க வில்லை அவருக்கு சிங்கள- பௌத்த மக்களின் ஆதரவு மட்டும் கிடைத்தது. ஆகவே சனாதிபதி மகிந்தராஜபக்ஷ நாட்டின் பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளார். பிரேமதாஸ நாட்டில் சனாதிபதியாக பதவியேற்றபொழுது நாடு பெரும் குழப்ப நிலையில் இருந்தது. ஆனால் மகிந்தராஜபக்ஷ பதவி ஏற்ற பொழுது நாட்டில் சமாதானம் ஏற்பட்டிருந்தது. பிரேமதாஸ சவால்களுக்கு முகம் கொடுத்தது போல், ராஜபக்ஷவுக்கு ஏற்படாது, சரித்திரத்தின் சில பாடங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதுடன் தேர்தல் பெறுபேறுகளை தனது வருங்கால நன்மைகளுக்கு பயன்படுத்து வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதுவரைக்கும் தனக்கு ஆதரவளிக்காத மக்களை தன்வசப் படுத்துவதற்கான மார்க்கங்களைத் தேடி அதற்கு பரிகாரங்களை கண்டு அவர்களையும் தன்வசம் இழுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

தற்பொழுது நாட்டின் இனப் பிரச்சினை மகிந்தவுக்கு பெரும் சவாலாக உள்ளது. முன்னைய சனாதிபதி சந்திரிகாவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இதுவரை கடைப்பிடித்துவந்த சமாதான பேச்சுவார்த்தைகளை மேலும் வலுவூட்டும் யுக்திகளை இவர் கடைப்பிடிக்க வேண்டும். நோர்வே தரப்பு சமாதான பேச்சுவார்த்தைகளில் மகிந்தராஜபக்ஷ கலந்துகொள்ள வில்லை. போர்நிறுத்த ஒப்பந்தம் , சுனாமி ஆழிப்பேரலை மீள் கட்டமைப் புக்களில் ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை இதுபுதிய நாடு புதிய அரசு மற்றும் சமாதான பேச்சுவார்த் தைகளை புதிதாக ஆரம்பிக்கப் போகிறேன் என சனாதிபதி ராஜபக்ஷ கூறியுள்ளார். மீண்டும் இந்த நாட்டில் யுத்தம் ஏற்படாது என்பதற்கு உத்தர வாதத்தை சனாதிபதி நாட்டுமக்களுக்கு வழங்கியுள்ளார். பேச்சுவார்த்தை மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என்று கூறியுள்ள அவர் இதை மிக விவேகமாக செயல்படுத்த வேண்டும்.

போர்நிறுத்தம் சம்பந்தமாகவும், நோர்வே அனுசரணையாளர்கள் சம்பந்தமாகவும் சனாதிபதி ராஜபக்ஷ தெளிவான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். சிலவேளை நோர்வே ஏற்பாட்டாளர்களை விலக்க நேரிட்டால் அதற்கு பதிலாக யாரை இணைத்துக் கொள்வது என்பது பெரும் பிரச்சி னைகளை கிளப்பும். மற்றும் சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும். இது சாதாரண பிரச்சினை அல்ல. போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்வதில் ராஜபக்ஷ முயற்சிப்பார். இதை புலிகள் ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகமே? யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை மேற்கொள்வதில் மகிந்த உறுதியாக இருக்கவேண்டும். இப்பிரச் சினைக்கு உருப்படியான விடைகளைக் காண வேண்டும். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, பசளை ஒரு அந்தர் 350 ரூபா பாடசாலை மாணவர்களுக்கு ஒருவேளை மதிய உணவு மற்றும் அநேக தேர்தல்வாக் குறுதிகளை மகிந்தவின் சிந்தனை வெளிப்படுத்தி யுள்ளது.

இவை இப்பொழுது சனாதிபதி மகிந்த நிறைவேற்ற வேண்டியவை. இதற்கான நிதிதேவைப்படுகிறது. இது நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கக் கூடாது. ஒருபுறம் மக்களுக்கு மானியம் வழங்கும் பொழுது மறுபுறம் மக் களுக்கு மேலும் வாழ்க்கைச் சுமை அதி கரித்தால் இதன் பிரதிபலன் மக்களின் எதிர்ப்புக்களை சம்பாதித்து கொள்வதே ஆகும். மற்றும் மானியங்கள் வழங்கும் பொழுது நாட்டில் பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்வது மகிந்தவின் அரசுக்கு மற்றுமொரு பெரும் சவா லாகும்.

மானியங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தால் அரச இயந்திரத்தை இயக்குவதற்கு நிதி இருக்காது. அப்படியானால் நாட்டில் பெரும் தனவந் தர்களிடம் இருந்தும் மற்றும் வெளி நாட்டு நிறுவனங்களில் இருந்தும் நிதி அறவிட வேண்டும். ஆகையினால் இவர்களுக்கான விசேட பொருளாதார திட்டங்களை அமுல்படுத்த வேண்டும். மகிந்தவுடன் இணைந்திருக்கும் இடது சாரிகள் இவற்றை ஏற்றுக்கொள் வார்களா? இவற்றை மகிந்த எப்படி சமாளிக்கப்போகிறார்? சனாதிபதித் தேர்தலின் பொழுது தேசிய பொரு ளாதாரத்தை பற்றி கூறியுள்ளார். இதன் முழு விபரங்களை மக்களுக்கு தெளிவாக கூறவில்லை. இவைகளை இப்பொழுது நடைமுறைப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு நன்மை கிடைக்கும். சனா திபதித் தேர்தலின் பொழுது அதிக தனியார் நிறுவனங்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே செயற்பட் டன. இவர்கள் எதிர்ப்பதற்கு ஜே.வி.பி- ஜாதிக ஹெல உறுமய போன்ற கடும் போக்காளர்கள் மகிந்தவுடன் இருந்த மையே காரணமாகும்.

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாக பதவியேற்றவுடன் என்னை விமர்சித்த வர்களே எனது நண்பர்கள் எனக் கூறினார். இதை புதிய சிந்தனையுடன் மகிந்த செயற்படுத்துவாரானால் இவர் இந்த நாட்டின் சிறந்த உதாரண புருஷர் எனக் கூற முடியும். மகிந்த ராஜபக்ஷ வுடன் இணைந்திருப்பவர்கள் தங் களுக்கு எதிராக செயல்பட்டவர்களை பழிவாங்குதல் மற்றும் சனநாயக உரிமைகளை பறித்தல் போன்றவற்றில் ஈடுபட்டால் மகிந்த சிந்தனை ஒரு கேலிக்கூத்தாகமாறும். அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் அரசை வழிநடத்தும் எண்ணம் உள்ள படியால் மகிந்தவின் சிந்தனைகள் இவர்களிடம்

லங்காதீப சிங்கள நாளிதழ்,
சி.ஜே.அமரதுங்க,
மொழியாக்கம்: அ.சக்திவேல்.

எடுபடுமா? இவை எல்லா வற்றிக்கும் மேலாக இன்னும் ஒரு காரணத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஆறுவருடங்கள் இந்த நாட்டை ஆட்சிபுரியப் போகிறார். அரசியலை வழிநடத்துபவர் இந்த, சனாதிபதி அதிகாரங்களைப் பற்றி மக்கள் நன்கு அறிவார்கள். இவரின் நடவடிக் கைகள் யாவும் நாட்டின் நன்மை கருதி இருக்கவேண்டும். இதில் இவர் தோல்வி கண்டால் இதன் பிரதி பலன்களை முழுநாடும் நாட்டில் உள்ள மக்களும் அனுபவிக்கவேண்டும். ஆகவே மகிந்த ராஜபக்ஷ அரசியலில் ஒவ்வொரு அடியையும் மிக அவதான மாக எடுத்துவைக்கவேண்டும்.

# சிங்கள- பௌத்த வாக்குகளைக் குறிவைத்து

# ஐ.தே.கட்சியைப் புனரமைக்க நடவடிக்கை?

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் முடிவுகளையடுத்து சிங்கள-பௌத்தவாக்குகளைப் பெறும் வகையில் ஐக்கியதேசியக் கட்சி புனரமைக்கப்படவேண்டும் என்று அக்கட்சியில் பலத்த குரல் எழுந்துள்ளது.**

சனாதிபதித்தேர்தலில் மகிந்தராஜ பக்ஷவினது வெற்றி சிங்கள-பௌத்த வாக்குகளினால் மட்டுமே பெறப்பட்டுள்ளது என்பதனால் சிங்களக்கட்சி என்ற அடையாளத்தையும், சிங்கள பௌத்த வாக்குகளையும் பெறும் வகையிலான கட்சித் தலைமையே தற்போது ஐக்கிய தேசியக்கட்சிக்கும் தேவை என்று அக் கட்சியில் கருத்து வலுவடைந்து வருகின்றது.

மேலும் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி பல தேர்தல்களில் தோல்வியடைந்து வருவதால் கட்சித் தலைமையில் மாற்றம் அவசியம் என்றும் கட்சித் தலைமையை மாற்றியமைக்க இது நல்ல சந்தர்ப்பம் என்றும் ஐ.தே.க.வினர் கூறிவருகின்றனர்.

இருப்பினும் தமிழ் மக்கள் வாக்களிக்காத நிலையிலும் 47 இலட்சம் வாக்குகளை ரணில்விக்கிரசிங்க பெற்றுள்ளதால் அவர் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து வலகத் தேவையில்லை என்று ஐ.தே.க.வின் மூத்த தலைவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ரணில்விக்கிரமசிங்க முன்வைத்த கூட்டாட்சி முறையிலான தீர்வு என்பதை சிங்கள-பௌத்தர்கள் தவறுதலாக புரிந்து கொண்டு நாட்டை பிளவுபடுத்தி விடும் என்று எண்ணிவிட்டதாகவும் அதனாலேயே வாக்குகள் சரிந்தன என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயங்களை விவாதிப்பதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செயற்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெறவிருந்தது. இந்த இரு கூட்டங்களும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# சனாதிபதித் தேர்தல் முடிவு குறித்து

# மேல்மாகாண ம.மு.ஆராய்வு

சனாதிபதித் தேர்தல் முடிவுகளையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நிலவரம் தொடர்பாக மேல் மாகாண மக்கள் முன்னணியின் உயர்பீடம் கட்சியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கடந்த ஞாயிறு இரவு கொழும்பில் கூடி விரிவாக ஆராய்ந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆதரவின்மையால் தோல்வியுற்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமான உத்தரவாதங்கள் எதுவுமின்றி விடுதலைப் புலிகளின் ஆதரவைக் கோரி தூதுவிட்டமை, புதிய சனாதிபதி ஆட்சிக் காலத்தில் தலைநகர் வாழ் தமிழ் மக்களின் எதிர்காலம், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னெடுப்புகள், இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு ஆகிய பல்வேறு விடயங்கள் மேற்படி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் எதிர்வரும் 26ஆம் நாள் கூடவுள்ள மத்திய குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படும் என்று மேல் மாகாண மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கட்சியின் துணைத் தலைவர் குமரகுருபரன், பொதுச் செயலாளர் சட்டவாளர் த.ஜெயரட்ணராஜா, பொருளாளர் ஜே.பி.ஜெயராம், நிதிச் செயலாளர் சுரேஸ் கங்காதரன், கொழும்பு மாவட்ட அமைப்பாளர் முரளிதரன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ்ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விமல் வீரவன்சவுக்கு நெஞ்சு வலி

ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச திடீர் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெஞ்சுவலி ஏற்பட்டதால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் பிரிவில் விமல் வீரவன்ச அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தற்போது அபாயகட்டத்தை தாண்டி விட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# மகிந்தவின் போர் நிறுத்தம் குறித்த உரைக்கு கண்காணிப்புக்குழு வரவேற்பு

புதியசிறிலங்கா சனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் போர்நிறுத்தம் தொடர்பான ஆரம்ப உரையை போர் நிறுத்தக்கண்காணிப்பு குழு வரவேற்றுள்ளது.

குழுவின் பேச்சாளர் ஒல்ப்ஸ் பிரகாடோட்டியர் இது தொடர்பாகக் கூறுகையில் போர்நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லப்படும் என்ற சனாதிபதியின் உரை நம்பிக்கையை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

புதிய சனாதிபதியின் உரையின் போது போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகுவது என்ற கருத்து வெளிப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு அதன் பணிகளை உரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. அதேபோல அரசாங்க சமாதான செயலகத்துடனும் வழமையான பேச்சுவார்த்தையிலும் அது ஈடுபட்டது.

இந்தநிலையில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் போர் நிறுத்த உடன்பாட்டை வலிமைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என ஒல்ப்ஸ்டோட்டியர் கூறினார். அதிலும் கிழக்கில் இந்த உடன்பாடு வலிமைப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். இதற்கிடையில் நோர்வேயின் சமாதான தூதர் எரிக் சூல்ஹெய்ம் எதிர்வரும் வாரத்தில் இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் சனாதிபதியையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.(32)

# யுத்தம் குறித்த அச்சம் நீங்கியதாலேயே மகிந்தவை சிங்களவர் ஆதரித்துள்ளனர்

**சர்வதேச ஊடகம் ஒன்று தெரிவிப்பு**

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என சர்வதேச ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ரணில் விக்கிரமசிங்க யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தியதாலேயே மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளதாக அதில் தெரிவிககப்பட்டுள்ளது.

இலங்கையின் பெரும்பான்மையின மக்கள் யுத்தம் குறித்த அச்ச உணர்வின்றி வாழும் நிலை உருவாக்கப்பட்டுள்ளதால் அவர்கள் தமிழ் மக்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படுவதைத் தடுக்க நினைப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் யுத்தத்தில் கொல்லப்படும் இராணுவத்தினரின் உடல்கள் சிங்கள மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அடிக்கடி அனுப்பிவைக்கப்பட்டதாலும் இலங்கையின் சர்வதேச விமான நிலையம், மத்திய வங்கி உட்பட முக்கிய இடங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாலும் யுத்தம் குறித்த அச்சம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும் கடந்த மூன்றாண்டுகளாக நீடிக்கும் யுத்த நிறுத்தம் காரணமாக யுத்தம் குறித்த அச்ச உணர்வை சிங்கள மக்கள் இழந்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் பலமிழந்து விட்டார்கள் என்றும் அதனால் அவர்களால் மீண்டும் யுத்தம் ஒன்றிற்கு செல்ல முடியாது என்று கருதுவதாகவும் அந்த ஊடகம் கருத்து வெளியிட்டுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியுள்ள இந்த மாற்றம் காரணமாகவே சிங்கள கடும்போக்காளரான மகிந்த ராஜபக்ஷவை சிங்கள மக்கள் வெற்றி பெறவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# கிளி.புனிததிரேசா பெண்கள் கல்லூரியில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

கிளி.புனிததிரேசா பெண்கள் கல்லூரியில் கல்வி கற்று மாவீரர்களானோரின் பெற்றோர் கௌரவிப்பு நாளை நடைபெறவுள்ளது. காலை 9.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ள இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் குறிப்பிட்ட பெற்றோர்களைக் கலந்துகொள்ளுமாறு பாடசாலைச்சமூகம் கேட்டுள்ளது.

# விதவைகளுக்கு ஈருருளிவழங்க மன்னார் அபி. ஒன்றியம் நடவடிக்கை

(மன்னார்)

விதவைகளாக்கப்பட்ட 50 பெண்களுக்கு தமது அன்றாடத்தொழில் செய்வதற்காக மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியம் லுமாலா ஈருருளிகளை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் இணைப்பாளர் செய்துள்ளார்.

# பிள்ளைச் செல்வங்களின் ஆளுமை வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு

கியூடெக் கரித்தாஸ் வன்னி ஸ்தாபனத்தின் அனுசரணையில் கனகபுரம் கிராமத்தில் இயங்கி வரும் வளர்மதி மாதர்சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சிப்பாசறை இணை இயக்குநர் அருட்தந்தை யாவிஸ் அடிகளாரின் அனுசரணையோடும், கிளி-கல்விப்பணிமனையில் பணியாற்றும் திருமதி சிவதாசின் அறிவூட்டலோடும், கனகபுரம் கிராம அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்அருட்தந்தை யாவஸ் அடிகளார்தனதுரையில் பெரியவர்கள், பெற்றோர்கள், புத்திஜீவிகள் எங்களுக்கு உதவிசெய்வார்களாயின், நாங்கள் எங்களை பாதுகாத்துக் கொள்வோம் என்ற மனஉணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவர் சமுதாயத்தின் உரிமைகளை, உணர்வுகளை மதிக்கின்றவர்களாக, நாம் செயற்படவேண்டுமென்றும், எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும், அன்னை வளர்ப்பினிலே என்ற கருத்தையும் எடுத்துரைத்தார்.



இதேவேளை கியூடெக் கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை பீற்றர் அடிகளாரின் அனுசரணையோடும். அருட்தந்தை யாவிஸ் அடிகளாரின் நெறிப்படுத்தலோடும், பூநகரி புனித அந்தோனியார் ஆலய மண் டபத்தில் சிறுவர்களின் கல்வியும் எதிர்காலமும் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட மற்றொரு பயிற்சிப்பாசறையும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கியூடெக் கரித்தாஸ் சிறுவர்குழு சார்பில் 28 சிறுவர் சிறுமியர் பங்குபற்றினார்கள். இந்நிகழ்வை நெறிப்படுத்திய அருட்தந்தை யாவிஸ் அடிகளார் உரையாற்றுகையில்; எதிர்கால வாழ்வின் அச்சாணிகளாய் விளங்கும் சிறுவர்களின் கல்வியில் நாம் அனைவரும் ஊக்குவிப்பாளர்களாக செயற்படவேண்டுமென்றும், சிறுவர்களுடைய மகிழ்ச்சியான ஆரோக்கியமான பாதுகாப்பான வாழ்விலே தங்களை இணைத்துக்கொள்ள, பெரியவர்கள் நாம் துணைபுரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இப்பயிற்சிப் பாசறையின் ஆசிரியையாக திருமதி. மதுரநாயகம் இணைந்து பயிற்சியினை மேற்கொண்டார்.

# நடமாடும் சேவை மூலம் பிறப்பு, இறப்புப் பதிவுகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் நடமாடும் சேவைமூலம் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கான பிறப்பு, இறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி நடமாடும் சேவையின் போது வடக்குவலய பிறப்பு,இறப்புப்



பதிவாளர் நாயகம் க.சதாசிவம்ஐயர் கலந்துகொண்டு விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களைப் பரிசீலனைக்குட்படுத்தியதுடன் உடனுக்குடன் அதற்கான தீர்வுகள் காணப்பட்டது.மேற்படி நடமாடும் சேவையின் போது நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து பயன்பெற்றனர். கரைச்சிப்பிரதேச செயலர் உட்பட பிரதேச செயலக ஊழியர்கள், கிராமசேவை அலுவலர்கள், கிளிநொச்சிப்பிரதேச இறப்பு,பிறப்புப் பதிவாளர், கிளிநொச்சி மாவட்ட பிறப்பு,இறப்புக் காரியாலய உத்தியோகத்தர்கள் மேற்படி நடமாடும் சேவையில் கலந்துகொண்டு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மோதலுக்கான புதிய நியமனங்கள்

# விக்கிரமபாகு கருணாரத்ன கவலை

நாட்டின்புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதுடன் தனது அமைச்சரவையின் தலைமை அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமித்ததன் மூலம் மீண்டுமோர் மோதலுக்குரிய நிலைமையே தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைமைக் குழு உறுப்பினர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற இனவாத பிற்போக்குச் சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டசனாதிபதி மகிந்தராஜபக்ஷ தமது அமைச்சரவையின் தலைமை அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமித்துள்ளமையானது பல்வேறு சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

கடந்த காலங்களில் கடுமையான அரசியல் போக்கொன்றை கடைப்பிடித்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க மீண்டுமொருமுறை தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டதன் மூலம் யுத்தமொன்றிற்கு அரசு தயாராகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அதே நேரம் மறுபுறத்தில் சனாதிபதித் தேர்தல் தொடர்பான விடுதலைப் புலிகளினது புறக்கணிப்பு என்ற நிலைப்பாடும் கூட தென் இலங்கை ஆட்சியாளர்களுக்கு சவால் விடுவதாகவே அமைந்துள்ளது. மீண்டுமொரு யுத்தமொன்றிற்கு முகம் கொடுக்க நேரிட்டால் கிழக்கில் தமது நிலைகளை விரிவுபடுத்த விடுதலைப் புலிகளும் பெரும் முயற்சிகளில் ஈடுபட வேண்டிவரும்.

அதே நேரம் நாட்டின் புதிய சனாதிபதி தற்போதைய சமாதான முயற்சிகளை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் அதற்கு இந்தியாவின் உதவியைக் கோரும் நிலைப்பாட்டிலுமுள்ளார்.

நாட்டின் முதன்மை பிரச்சினையான இன நெருக்கடி தீர்வு தொடர்பிலான இழுத்தடிப்பு, மறுபுறத்தில் வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதார பின்னடைவு என்பவற்றிற்கு மத்தியில் மோதலுக்குரிய முரண்பாட்டுச் சூழல் ஒன்று உருவாக்கப்பட்டு வருவதுடன் நாடு மிகவும் மோசமான சூழல் ஒன்றிற்கு முகம் கொடுத்து வருவதையே சுட்டிக்காட்டுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


C.H.C

**நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்**

**சான்றிதழ்வழங்கல்நிகழ்வு**

எமது நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வந்த உதவி மருந்தாளர் பயிற்சி நெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26.11.2005 சனிக்கிழமை 3.00 மணிக்கு கிளி/ கனிஸ்ர மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.எனவே அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகிறோம்.

(சி-13376)

**நிர்வாகப் பணிப்பாளர்**
**நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்.**



## ஆங்கில ஆசிரியர் தேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆங்கில கல்வித் திட்டத்தில் ஆங்கிலம் போதிக்கக்கூடிய தகுதிவாய்ந்த ஆங்கில ஆசிரியர் தேவை. சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

*க. கணேஸ்,*
*கௌரவ செயலாளர்*
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்*
*கிளிநொச்சி மாவட்டக் கிளை*

(சி-13364)



## தமிழீழப் போக்குவரவுக்கழகப் பயணியர் பேருந்துப்பணி

## இராமநாதபுரம்-கிளிநொச்சி

**இப் பேருந்துப்பணி பொதுமக்கள் வேண்டுகைக் கிணங்க 26.11.2005 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

<u>நேரஒழுங்கு</u>

இராமநாதபுரம்-கிளிநொச்சி

இராமநாதபுரம் → வட்டக்கச்சி → கிளிநொச்சி

காலை:- 07.30 07.45 08.15

கிளிநொச்சி-இராமநாதபுரம்

கிளிநொச்சி → வட்டக்கச்சி → இராமநாதபுரம்

மாலை:- 05.00 05.30 05.45

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

(சி-13375)


# இலங்கை சமாதான செயற்பாடுகளில் இந்தியா தலையிடுவது குறித்து ஆராயக்கூடும்

### *இந்திய அரசியல் விமர்சகர் தெரிவிப்பு*

எதிர்காலத்தில் இலங்கையின் சமாதான செயற்பாடுகளில் இந்தியா தலையிடுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க நேரிடும் என இந்தியாவின் அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார். சமாதான செயற்பாடுகள் சீர்குலையாமல் இருக்க இந்தியா இரண்டு தரப்பினரிடமும் இதன் போது கோரிக்கை விடுக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் அரசியல் விமர்சகரான ஏ.பி.மஹாபத்ரா யு.பி.ஐ.செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

சனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டமை இந்தியாவிற்கு புதிய சிக்கலை ஏற்படுத்தக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்கட்சித் தலைவர் இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய தலைவர் என இந்தியாவில் பரவலான கருத்து நிலவியதாகவும் மஹாபத்ரா தெரிவித்துள்ளார். கூட்டமைப்பின் பங்காளியான ஜே.வி.பியின் நிலைப்பாடுகள் விடுதலைப்புலிகளை சமாதானத்திற்கு இட்டுச்செல்ல கூடிய வகையில் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையின் சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இந்தியாவிற்கு பாரிய பொறுப்பு உள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

# ஐ.தே.க.பா. உ களின் கூட்டம் ஒத்திவைப்பு

பாராளுமன்றக் கூட்டத் தொடரை முடிவிற்கு கொண்டுவருவதற்கு எடுக்கப்பட்ட அவசர முடிவினால் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமும் நாளைவரை [illegible] ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு நடைபெறமுன்னர் ஏற்பாடாகி இருந்தது.எனினும் பாராளுமன்றக் கூட்டத் தொடரை முடிவிற்கு கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்ட அவசர முடிவினால் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தையும் நாளை வரை ஒத்திவைத்ததாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


## கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் தேவை

முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா வடக்கு மடு கல்வி வலய பாடசாலைகளில் காணப்படும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான வெற்றிடத்திற்கு ஆசிரியர் வளம் தேவையாக உள்ளது. விஞ்ஞான கணித பட்டதாரிகளுக்கு பட்டதாரிகளுக்குரிய சம்பளமும், க.பொ.த உயர்தரவகுப்பு விஞ்ஞான, கணிதப் பிரிவில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு தகுதி காண் ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்கப்படும். கல்வித் தகைமையுடையவர்கள் தங்கள் விண்ணப்பத்தை கல்வித்தகைமைச் சான்றிதழ்களுடன் 05.12.2005 திங்கட்கிழமைக்கு முன்னதாக தமிழீழ கல்விக் கழகம் நடுவப் பணிமனைக்கு அனுப்பிவைக்கவும்

பொறுப்பாளர்,
தமிழீழ கல்விக்கழகம்,
தமிழீழம்.

(சி-13374)



## 6ஆம் ஆண்டு நிறைவின் நினைவில்...

தாயின் மடியில் 17 - 01 - 1980



தாயக மடியில் 24 - 11 - 1999

**2ஆம் லெப். மாலா**

**(சிங்கராசா மேரி வசந்தா)**

மல்லாவி

சம்பவம்:- ஓயாதஅலை 03 இன்போது

வீரியம் கொப்பளித்துப் பாயும் விடுதலைப்பெரு நதியின் ஒவ்வொரு துளியிலும் அதன் ஒவ்வொரு அசைவிலும் உனது முகம்!

தமாங்கர்தோர் அருகாமை
மல்லாவி. (6939)

என்றும் உன்நினைவுடன்
சகோதரர்கள்

# பீகார் முதலமைச்சராக நிதிஷ்குமார் இன்று பதவியேற்பு

## —லல்லுவின் 15 வருடஆட்சி முடிவு



(பாட்னா)

பீகார் சட்டசபைத் தேர்தலில் ஐக்கிய ஜனதாதளம் -பா.ஜ கூட்டணி பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சி அமைத்துள்ளது. ஐக்கிய ஜன தாதளம் தலைவர் நிதிஷ்குமார் முதல மைச்சராக இன்று மதியம் ஒரு மணிக்கு பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் பதவியேற்கிறார். இதன் மூலம் லல்லுபிரசாத் யாத வின் ராஷ்டிரிய ஜன தாதளத்தின் ஆட்சி 15 ஆண்டுகால முடிவுக்கு வந்துள்ளது.

பீகார் மாநில சட்டசபைக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 19ஆம் திகதி வரை நான்கு கட்டமாக தேர்தல் நடைபெற்றது.

243 தொகுதிகளில் 122-இல் வெற்றி பெற்றால்மட்டுமே ஆட்சி அமைக்கமுடியும். ஆனால் தே.ஜ. கூட்டணி 147 இடங்களை கைப்பற்றி பெரும்பான்மை பெற்றுள்ளது. 243 தொகுதிகளுக்கான முடிவு அறிவிக்கப்பட்டதில் ஐக்கிய ஜனதாதளம் 87 இடங்களிலும். பா.ஜ 55 இடங்களிலும் வெற்றிபெற்றிருந்தது. மற்றும் ஆதரவு சுயேட்சைகள் ஐந்து பேர் வெற்றி பெற்றுள்ளனர். நிதிஷ்குமாரை முதல மைச்சர் வேட்பாளராக அறிவித்து போட்டியிட்டதால் நிதிஷ்குமார் தலைமையில் ஆட்சி அமைப்பது உறுதியாகிவிட்டது.

லல்லு பிரசாத் தலைமையிலான ராஷ்டிரிய ஜனதாதளம், காங்கிரஸ் தேசியவாத காங்கிரஸ், மார்க்சிய கம்யூனிஸ்டு ஆகியகட்சிகள் சேர்ந்து மதசார்பற்ற ஜனநாயக முன்னணி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்டன. இந்தக் கூட்டணி எதிர்பாராத தோல்வியை சந்தித்தது. இந்தக் கூட்டணிக்கு 65 இடங்களே கிடைத்தன.

# புதுடில்லியில் தீவிரவாதிகள் ஊடுருவல்; இந்திய உளவுத்துறை எச்சரிக்கை

(புதுடில்லி)

புதுடில்லியில் மீண்டும் நாச வேலையில் ஈடுபட பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற தற்கொலை படை ஒன்று ஊடுருவி இருப்பதாக இந்திய உளவுத்துறை தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து டில்லியிலுள்ள புகையிரத நிலையங்களில் அதிரடிப் படை பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே மக்கள் அதிகம் கூடும் சந்தைப் பகுதியில் தீவிர வாதிகள் மீண்டும் குண்டுகளை வெடிக்கச் செய்யலாம்என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சமீபத்தில் ஜெய்ஷ்-இ-முகம்மது இயக்க தலைவர் சைபுல்லா என்பவர் சுட்டுக்கொல்லப் பட்டார். அவரிடம் இருந்து கிடைத்த தடயங்கள் மூலம் இந்த சதித் திட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் இருக்கும் தீவிர வாதிகள் அங்குள்ள புகழ்பெற்ற அக்சார்தம் கோவிலை தகர்க்க முயற்சி செய்யக்கூடும் என்ற தகவல் கிடைத்துள்ளது. இதனால் நேற்று முதல் அந்தக் கோவில் வளாகத் திலும் அதிரடிப்படை பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது.

# யார் ஆட்சிக்கு வந்தாலும் கவலையில்லை தேர்தல் தோல்வியில் லல்லு விரக்தி



யார் ஆட்சிக்கு வந்தாலும் கவலை யில்லை என பீகார் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து ராஷ்டிரிய ஜனதாதளத்தின் தலைவர் லல்லு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

பீகார் சட்டசபைத் தேர்தலில் ராஷ்டிரிய ஜனதா தளத்துக்கு ஏற்பட்ட தோல்வியை லல்லு பிரசாத் யாதவ் நேற்று ஒப்புக்கொண்டார். நிதிஷ்குமார் தலைமையிலான அரசுக்கு ஆக்க பூர்வமான ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்து பிரச்சினைகளில் இருந்தும் விடுபட்ட மனநிலையில் இருக்கிறேன் என்தோளில் இருந்த சுமையை இறக்கிவைத்துவிட்டேன். 15 ஆண்டுகள் ஆட்சிபுரிய பீகார் மக்கள் எங்களுக்கு ஆதரவு கொடுத்தனர். "மூன்று மாதங்களில் குற்றங்களை அடியோடு ஒழித்து வளர்ச்சிப் பாதையில் அழைத்து செல்வோம்"என்று கூறியவர்களுக்கு மக்கள் வாய்ப்பு அளித்துள்ளனர். அவர்கள் ஏமாற்றப்பட்டு விட்டனர் என்பதை மூன்று மாதங்களில் புரிந்து கொள்வார்கள்.

எனக்கு யார் மீதும் பொறாமையோ மனக் கசப்போ இல்லை எனினும், தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரத்தின் போது பின்தங்கிய மக்களை, ஏழை மக்களை, சிறு பான்மையினரை திசை திருப்பி விட்டனர். அவர்களிடம் தவறான கருத்துகளை பரப்பி விட்டனர். ராம் விலாஸ் பஸ்வான் பற்றி சொல்ல ஒன்றும் இல்லை. இந்தப்போட்டியில் அவர் இடம் பெறவே இல்லை எனத் தெரிவித்தார்.


## அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்–2006 ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் ஆகியவற்றுக்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்.**

மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கான கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

குத்தகை சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 2005.11.28 பி.ப.2.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2005.11.29 ந.ப.12.00 மணிவரை
கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 2005.11.29 பி.ப.2.00 மணிக்கு

திருமதி.ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம்தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிகாமம்தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
21.11.2006.

(சி.13384)



## United Nations Development Programme

The UNDP Mine Action project, a project of UN support to mine Action in Sri lanka,
has the following vacancies:
The post of Driver to be based in jaffna.

**UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME**
**Position of Driver, JAFFNA.**

| The duties and responsibilities of the Driver, Jaffna are as follows: | Educational Background. |
|---|---|
| The Driver will be responsible to the jaffna District Mine Action Officer. Specific duties will be;<br>* to support the DMAO Operations, Quality Assurance and Administration requirements in jaffna;<br>* to drive office vehicles for the transport of authorised personnel, for official meetings, field trips and to deliver various items to other locations;<br>* be responsible for the day to day maintenance of the assigned vehicles;<br>* perform minor vehicle repairs and arrange for routine services and other major repairs;<br>* keep a daily log of official trips, mileage, fuel consumption oil changes ets;<br>* follow official guielines in the event of an accident;<br>* follow official UN security security guide lines;<br>* use the HF and VHF radios in accordance with UN guidelines;<br>* other duties as required by either the Mine Action Officer, Administration Officer or the Technical Advisor. | Experience:<br>* hold a valid Sri lankan driving license;<br>* good knowledge of Sri lankan geography;<br>* good knowledge of Sri Lankan road rules and regulations;<br>* be able to operate a VHF a nd HF radio:<br>* at least 2 years experience as a professional driver,<br>* be able to work in a multi national environment;<br>* have good command of verbal and written English, Tamil and Sinhala;<br>Others<br>* Fluent in both written and spoken Tamil and English. Knowledge in Sinhala language is an advantage.<br>* Willing to travel for training if required;<br>* possess good work habits with a willingness to work in a multi-cultural environment;<br>* Flexible and adaptable to any situation;<br>* Be in good health.<br>Duration: Initially for one year with probable extensions.<br>Duty Station: Jaffna. |

Qualified candidates are invited to send an updated CV containing details of educational and quafessional qualifications and work experience with the names of two, non-related referees and a contact telephone number during working hours, on or before 4 pm on the 30th November 2005. The position offers an attractive remuneration package. Applications should be addressed to the Technical Advisor, UNDP Mine Action project, District Secretariat, jaffna.
N.B Only short-listed candidates will be notified.

(சி.13383)


# 7 வயதுசிறுமிக்கு நிச்சயதார்த்தம்; ஆசிரியர் பொலிசில் புகார்

ஆந்திர மாநிலத்தில் முதலாம் வகுப்பில் படிக்கும் ஏழுவயது மாணவிக்கு அவரது பெற்றோர் திருமணம் நிச்சயதார்த்தம் செய்துள்ளனர். இது குறித்து மாணவியின் வகுப்பாசிரியர் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீரம்மாள் என்ற சிறுமிக்கும் அதேபகுதியை சேர்ந்த 10 வயது சிறுவன் வெங்கடேஷ் என்பவருக்கும் திருமணம் செய்வதற்காக நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

இதேபோல் வீரம்மாளின் அக்கா காயத்ரி (வயது-15). மற்றும் அண்ணன் குரு (வயது-13) ஆகியோரது திருமண நிச்சயதார்த்தமும் ஒரே நேரத்தில் நடந்தது.

நிச்சயதார்த்த தினத்தன்று வீரம்மாள் பாடசாலைக்கு செல்லவில்லை. எதற்காக பாடசாலைக்கு வரவில்லை என்று ஆசிரியர் விசாரித்த போது நிச்சயதார்த்த தகவல் வெளியானது. சிறுவயது திருமணம் பற்றி வகுப்பாசிரியர் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். இது பற்றி பொலிசார் வீரம்மாளின் பெற்றோரிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி சிறைகளுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(மதுரை)

பாபர் மசூதி இடிப்பு தினத்தை யொட்டி தமிழகம் முழுவதும் உள்ள சிறைகளுக்கு பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

பாபர் மசூதி இடிப்புதினமான டிசம்பர் 6ஆம் திகதிக்கு முன் ஒவ்வொரு ஆண்டும் கோவில்கள், புகையிரத நிலையங்கள், சிறைகள், முக்கிய சந்திப்புகள், சுற்றுலா தலங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்படுவது வழக்கம். கடந்த வாரம் பீகாரில் தீவிர வாதிகள் சிறைக்குள் புகுந்து கைதி களை விடுவித்ததைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள சிறைகளில் துப்பாக்கி ஏந்திய பொலிசார் பாது காப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பாபர் மசூதி இடிப்பு தினத்திற்கு இன்னும் இரண்டுவாரங்களே உள்ள நிலையில், தொடர்ந்து துப்பாக்கி ஏந்திய பொலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள தீவிர வாதிகளை சந்திக்க வருபவர்களை கடும் சோதனைக்குப் பின்பே அனு மதிக்க வேண்டுமென சிறை கண் காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. தமிழகத்தில் அனைத்து சிறைகளிலும் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

# மத்திய அமைச்சருக்கு சமாதி; ஆந்திராவில் பெரும் பரபரப்பு

மத்தியஅமைச்சர் நரேந்திராவுக்கு காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் சமாதி கட்டியுள்ளனர். இந்த சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவரும் மத்திய கிராம வளர்ச்சித் துறைஇணை அமைச்சருமான நரேந்திராவின் கட்சியினருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் அடிக் கடி மோதல் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக ஒரு கட்டத் தில் "முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு சமாதி கட்டப்படும் "என்று நரேந்திரா பேசியுள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காளஹஸ்தி காங்கிரஸ் தொண்டர்கள் இங்குள்ள சுவர்ணமுகி நதிக்கரை ஓரத்தில் சமாதி ஒன்றைக் கட்டியுள்ளனர். சமாதி மீது பெயர்ப் பலகை ஒன்றை அமைத்து மத்திய அமைச்சரின் பெயரை செதுக்கி யுள்ளனர். இது ஆந்திர மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டி; 14 பேர் கொண்ட அணியில் கங்குலி



வரும் டிசம்பர் இரண்டாம் திகதி ஆரம்பமாகவுள்ள சிறிலங்கா அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட 14 பேர் கொண்ட அணியில் முன்னாள் அணித்தலைவர் கங்குலியின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக ராகுல் ராவிட் அறிவிக்கப்பட்ட 24 மணித்தியாலத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. மேலும் பாலாஜி, சகிர்கான் போன்ற அனுபவ பந்து வீச்சாளர்களைத் தவிர்த்து 19வயது ருத்ரபிரதாப்சிங் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார், டெஸ்ட் விக்கெட் காப்பாளர் டினேஷ் கார்த்திக்குக்குப் பதிலாக ஒரு நாள் போட்டிகளில் பிரகாசித்து வரும் மகேந்திரசிங் தோனிக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அணி விபரம்:-

ராகுல் ராவிட், (அணித்தலைவர்) சேவாக், கம்பீர், டெண்டுல்கர், லக்ஸ்மன், யுவராஜ்சிங், கைப், தோனி (வி.கா) பதான், அகர்கர், ஹர்பஜன்சிங், முரளி கார்த்திக், கும்ளே ருத்ர பிரதாப்சிங்




## அணியில் இடம்பிடிக்க கங்குலி கெஞ்சக்கூடாது




திறமையை வெளிப்படுத்தி அணியில் இடம்பெற வேண்டுமே தவிர, அதற்காக கெஞ்சக்கூடாது என முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலி நிலை குறித்து கபில்தேவ் கருத்து தெரிவித்துள்ளார். கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கபில்தேவ், நிருபர்களிடம் மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

கங்குலி நீக்கப்பட்ட விடயத்தில் எந்த அரசியல் தலையீடும் இல்லை. கடினமாக உழைத்தே அவர் அணியில் இடம்பெற வேண்டும். ஓட்டம் மேல் ஓட்டங்களை அவர் சேர்க்க வேண்டும். அவர் தன்னை உயர்வாக நினைக்கும் மனப்பான்மையை விரும்புகிறேன். அதேநேரம் அணியில் இடம்பெறுவதற்காக கெஞ்சுவதை நான் விரும்பவில்லை என்றார் கபில்.

## இது ராவிட்டின் ராசி?



சென்னையில் சமீபத்திய மூன்று போட்டிகளும் தொடர்ந்து மழையால் கைவிடப்பட்டுள்ளன. 2003 இல் நியூசிலாந்திற்கு எதிரான ஒரு நாள் போட்டி ரத்தானது. (இப்போட்டிக்கு ராவிட் தான் தற்காலிக தலைவராக இருந்தார்) 2004இல் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி பரபரப்பான கட்டத்தில் இருந்தது. கடைசி நாளில் இந்தியா 210 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை காணப்பட்டது. பத்து விக்கெட்டுக்களும் அப்படியே இருந்ததால் இந்திய அணியின் வெற்றி பிரகாசமாக இருந்தது. ஆனால் மழை குறுக்கிட ஆட்டத்தை கைவிட நேர்ந்தது.

## அவுஸ்திரேலிய ஒரு நாள் தொடர் நியூசிலாந்துஅணியில் கிறிஸ் கெய்ன்ஸ்



நியூசிலாந்து அணியின் சகல துறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் கலந்து கொள்ளும் நியூசிலாந்து அணியில் கிறிஸ் கெய்ன்ஸ் இடம்பெறுவார் என பயிற்சியாளர் ஜோன் பிறாஸ்வெல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காயமடைந்துள்ள சகலதுறைவீரர் ஜேக்கப் ஓரத்தின் உடல் நிலை தேறியுள்ளதாகவும், இதனால் அவர் அணிக்கு திரும்பும் வாய்ப்பும் அதிகரித்துள்ளதாகவும் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியுடனான ஐந்து ஒரு நாள் போட்டிகளில் நியூசிலாந்து அணி 4-0 என்ற நிலையில் தோல்வி அடைந்தது.

இப்போட்டியில் அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் பங்குபற்றமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நான்காவது ஒரு நாள் போட்டி நாளை கொல்கத்தாவில்



இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி நாளை கொல்கத்தாவில் பகலிரவாக நடைபெறுகின்றது.

சென்னையில் நடைபெறவிருந்த மூன்றாவது போட்டி நடைபெறாததால் பெரும் ஏமாற்றமடைந்த ரசிகர்கள் நாளைய போட்டியை காண்பதற்கு ஆவலாயுள்ளனர்.

ஏற்கனவே நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் இரு அணிகளும், தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள நிலையில் எஞ்சியுள்ள இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றாலே தொடரைக் கைப்பற்றலாம்.

இந்த நிலையில் இனிவரும் போட்டிகள் இரு அணிக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதுடன் கிரிக்கெட் ரசிகர்களுக்கு அரியதொரு விருந்தாகவும் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

## வருடாந்த மத்தியஸ்தர் பரீட்சை டிசம்பர் 15 இல் நடாத்த ஏற்பாடு

### மத்தியஸ்தர்களுக்கான பணிப்பாளர் மூசின் ஆரிப்

சிறிலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்த மத்தியஸ்தர் பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதி உதைபந்தாட்ட சம்மேளனத்தில் நடைபெறும் என மத்தியஸ்தர்களுக்கான பணிப்பாளர் மூசின் ஆரிப் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்ப படிவங்களை இளையோர் செயற்பட்டு நிறுவனத்தில் பெற்று நிரப்பிக் கொடுக்கவும். கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மத்தியஸ்தர் பற்றாக்குறை நிலவுவதைக் கருத்தில் கொண்டு இவ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் முதல் வாரத்தில் மத்தியஸ்தர்களுக்கான மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு இப் பரீட்சைக்காக நடத்தப்படும் என இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

## யோர்சயர் அணியில் கிளஸ்பி



அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளரான யோர்சயர் அணியில் கிளஸ்பி வரும் 2006ஆம் ஆண்டு பருவ காலத்தில் விளையாட ஒப்பந்தம் செய்துள்ளார்.

ஆஷஸ் தொடரின் போது பந்து வீச்சில் பிரகாசிக்காத இவர் வேறு நாட்டு கவுண்டி அணிகளில் பங்கேற்க விருப்பங்கொண்டிருந்தார்.

ஆஷஸ் தொடரில் இவர் பிரகாசிக்கத்தவறிய போதிலும் இவரின் திறமையை கிரிக்கெட்சபைப் பணிப்பாளர் டேவிட் பயஸ் பத்திரிகையிடம் தெரிவித்துள்ளதுடன் அவரைப்போன்ற ஒருவரை பெற்றுக் கொள்ள முடியாது என்றும் யோர்சயர் அணிக்காக அவர்சிறப்பாக விளையாடுவார் என்றும் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய தேசிய அணியில் முன்னணிப் பந்து வீச்சாளரான மெக்ராத்துக்கு கிளஸ்பி பக்கபலமாக திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது



## வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கி செல்லும் பைசலாபாத் டெஸ்ட் போட்டி



பைசலாபாத்தில் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவில் தனது இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பாடும் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் சல்மான்பட் 50, மலிக் 26, யுனிஸ்கான் 27, யுஹானா 20 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காது இன்சமாம் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிளிண்டொப் மூன்று விக்கெட்டுக்களையும், ஹொக்காட், உடல் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து முதல் இனிங்சில் 446 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

பந்து வீச்சில் அப்ரிடி நான்கு விக்கெட்டுக்களையும், நவீட் உல் ஹசன், அக்தர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் முதல் இனிங்சில் 462 ஓட்டங்களைப் பெற்றது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.



பிரிமியர் லீக் கால் பந்துப்போட்டியில் மஞ்செஸ்டர் அணியின் பிரபல கால்பந்தாட்ட வீரர் றூனி பெரும் தாக்குதலில் ஈடுபட்டபோதும் தன் அணியுடனான போட்டியில் தோல்வியைத் தவிர்க்க முடியாதுபோனது. இதில் தன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



### சிந்தனைக்கு

மொழி, கலை, கலாசாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்பிற்குத் தூண்களாக விளங்குகின்றன; ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன; ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாகின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 24.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## தலைமை மாற்றம் மட்டுமல்ல...!

சிறிலங்காவின் புதிய பிரதமராக எதிர்பார்க்கப்பட்ட எவரும் நியமிக்கப்படவில்லை. அதேசமயம் மகிந்தராஜபக்ஷவின் புதிய அமைச்சரவையும், எதிர்பார்க்கப்பட்ட தினத்தில் அமைக்கப்படவில்லை. ஒருநாள் தாமதத்தின் பின்னர் புதிய அமைச்சரவை பதவியேற்றுள்ளது. ஆனால், இவ் அமைச்சரவை தான் தொடர்ந்து நீடிக்கும் என அறுதியிட்டுக் கூற முடியாது.

ஏனெனில், சிறிலங்காவில் இம்முறை நிகழ்ந்த ஆட்சி மாற்றமானது கடந்தகால ஆட்சி மாற்றங்களில் இருந்து பெரிதும் மாறுபட்டது. அதாவது அதிகாரத்தின் தலைமை தென்னிலங்கைக்குக் கைமாறியுள்ளது. மத்திய – மேற்கு (கண்டி–கொழும்பு) பகுதி கனவான்களின் குழுமத்தினரிடம் இருந்து ஆட்சி அதிகாரங்கள் தெற்கு கனவான்களின் குழுமத்திற்கு மாறியுள்ளது.

அது மட்டுமன்றி இம்முறை நாட்டின் தலைமையை உருவாக்கியவர்களாக தெற்குப் பகுதிச் சிங்களவர்களே உள்ளனர். ஆகையினால், ஆட்சிமாற்றம் ஏற்பட்ட போது கடந்த காலத்தைப் போன்று அதிகாரக் கைமாற்றம் இலகுவாக ஏற்பட்டு விட வாய்ப்பில்லை.

அதாவது மத்திய – மேற்குத் தலைமைகள் ஆட்சிமாற்றத்தின் போது அதிகாரங்களைக் கைமாற்றிக் கொண்டதும்; பகிர்ந்தளித்ததும் போன்று இலகுவில் மேற்கொண்டு விடுதல் சாத்தியமற்றது. குறிப்பிட்டுக் கூறுவதானால் தெற்கின் தலைமை தமக்கு விசுவாசமிக்க அரசியல்வாதிகளை, அதிகாரிகளை, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியமானதாகவுள்ளது.

மத்திய – மேற்கு தலைமையானது ஐ.தே.க சுதந்திரக் கட்சி எனப் பிளவுபட்டிருந்த போதும் அதிகாரிகள் மட்டத்தில் பெரும் வேறுபாடு இருக்கவில்லை. ஆட்சியின் மீதான தனிநபர் விசுவாசம் என்பது மட்டுமே அவர்களின் தேர்விற்கு அடிப்படையாக இருந்தது.

அதாவது ஐக்கிய தேசியக் கட்சி– சுதந்திரக் கட்சிகளின் தலைவர்கள் இடையில் பெரும் வேறுபாடு இல்லை. இருதரப்பினரும் ஒரே குழுமத்தினர் அதற்கு மகிந்தராஜபக்ஷ, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர முற்பட்டதும் சனாதிபதி சந்திரிகா, ரணில் விக்கிரசிங்காவுடன் இலகுவிலேயே தொடர்பை வலுப்படுத்திக் கொண்டதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

ஆகையினால் தென்னிலங்கைக்கு அதிகாரத்தின் தலைமை மாறியதை அடுத்து அதிகாரமட்டத்தில் செய்ய வேண்டிய மாற்றங்கள் முன்னைய மாற்றங்களைவிடக் கடினமானதாகவும், தெரிவுகள் வேறுபட்டதாக இருக்கவேண்டியதாகவும் உள்ளமை வெளிப்படையானது.

குறிப்பாக ஆட்சியை இடையூறு இன்றி நடத்தவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் மத்திய – மேற்குத் தலைமைகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியவராக மகிந்தராஜபக்ஷ உள்ளதோடு பண்டாரநாயக்க குடும்பத்தினரையும் ஓரந்தள்ள முற்படுதல் அவருக்கு அவசியமானதாகவுள்ளது.

ஏற்கனவே இத்தகைய செயற்பாட்டில் அவர் இறங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் என்ற ரீதியில் முன்னதாகவே சில அமைச்சர்களை ஓரம்தள்ளி உள்ளார். இதில் பண்டாரநாயக்க குடும்பத்துடன் தொடர்புபட்டவர்கள், ஆதரவாளர்கள் அதிகம் எனவும் அறியவருகின்றது.

குறிப்பாக மகிந்தராஜபக்ஷ சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் பிரதமர் பதவி அநுரா பண்டாரநாயக்காவிற்கு என்ற நிலை மாறி அவரிடம் இருந்த வெளிவிவகார அமைச்சும், பறிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று நிதியமைச்சர் பதவி சரத் அமுனுகமவிடம் இருந்து பறிக்கப்பட்டுமுள்ளது. இம்மாற்றங்கள், பறிப்புக்கள் தனியாக அரசியல் தலைமைகள் மட்டத்தில் மட்டுமல்ல சிறிலங்காப்படைத்துறை, நிர்வாகத்துறை ஆகிய அனைத்துத்துறையிலும், மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது. எடுத்துக்காட்டாக சிறிலங்கா ஆயுதப்படை, பொலிஸ்படை, புலானாய்வுத்துறை ஆகியவற்றின் கட்டமைப்பில் மகிந்தராஜபக்ஷ செய்யத் தீர்மானித்துள்ள மறுசீரமைப்பும், அதாவது மாற்றங்களும், சனாதிபதி சந்திரிகா படைத்துறை அதிகாரிகளின் சேவைக்கால வயதெல்லையை நீடித்ததை ரத்துச்செய்யத் தீர்மானித்துள்ளமையும் இதன் வெளிப்பாடாகவே கொள்ளத்தக்கது.

சிறிலங்காவின் வரலாற்றில் இராசதானிகள் மாறுவது என்பது ஒன்றும் புதிதல்ல. அனுராதபுரம், பொலநறுவையில் இருந்து படிப்படியாக மாறியே இறுதியாகக் கொழும்பிற்கு இராசதானி சென்றது. தற்பொழுது கொழும்பே இராசதானி தனியாக இருப்பினும், தென்னிலங்கை மன்னன் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிவிட்டதன் காரணத்தால், இராசதானியை உடன் மாற்ற முடியாது விட்டாலும் தனது ஆட்சியை நிர்வகிக்கக்கூடிய தளபதிகளையும், பிரதானிகளையும் மாற்றம்செய்ய முற்படுவது எதிர்பார்க்கத்தக்கதே.




சமாதானமும் புதிய பிரதமர் நியமனமும்

## பதவி ஏற்ற மாலையிலேயே அமைச்சர் ஒருவர் பதவி விலகல்

நிபுணத்துவ மற்றும் வேலை வாய்ப்புக்கள் துறையின் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக நேற்று முற்பகல் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபதி சூரியாராச்சி தமது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

நேற்று மாலை அவர் தமது பதவி விலகல் கடிதத்தை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

தமது சட்டத்தரணி தொழிலுக்கு பாதகம் ஏற்படும் என்ற அடிப்படையிலேயே இந்தத் தீர்மானத்தை தாம் மேற்கொண்டதாக அவர் தமது கடிதத்தில் அறிவித்துள்ளார்.

எனினும் தமக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்பில் அதிருப்தியுற்ற நிலையிலேயே அவர் தமது பதவியில் இருந்து விலகினார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சியின் பதவி விலகல் கடிதத்தை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளவில்லை எனச் சனாதிபதி செயலக தரப்புகள் தெரிவித்துள்ளன. (32)

## அரச கட்டமைப்பை பாதித்துள்ள ஊழலை தடுக்க புதிய சனாதிபதி முயலவேண்டும்

### – ட்ரான்பரன்சி இன்ரநஷனல் கோரிக்கை

சிறிலங்கா அரசாங்க கட்டமைப்பை பாதித்துள்ள ஊழலைத்தடுக்க புதிய சனாதிபதி உயர் பதவிகளில் அரசியல் சார்ந்த நியமனங்களை அனுமதிக்காமை தொடர்பான கொள்ளைகளை கடைப்பிடிக்க வேண்டும் என ட்ரான்பரன்ஸி இன்ரநஷனல் சிறிலங்கா கேட்டுக்கொண்டுள்ளது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஊழலுக்கு எதிரான செயற்றிட்டங்களை உள்ளடக்கியதான நம்பத்தகுந்த அரசாங்கத்தை உருவாக்குவதற்கான சில நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது

உயர் மட்டங்களில் நிலவும் ஊழலைக் கட்டுப்படுத்த ஊழல் எதிர்ப்பு நிறுவனங்களின் செயற்பாடுகளை வலுப்படுத்துவது அரசியல் தலைமைத்துவத்தின் தேவை சிறிலங்காவுக்கு உள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.புதிய சனாதிபதி ஊழலைக் கட்டுப்படுத்த சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைவாக சகல துறைகளிலும் புதிய கலாச்சாரத்தை உருவாக்குவது மிக முக்கியமானது. நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள தலைவர் என்ற முறையில் பொதுத்துறை நிறுவனங்களில் ஊழல் மோசடிகளை ஏற்படுத்தவல்ல சாத்தியக் கூறுகளை வழங்காமல் செயற்படவேண்டும் எனவும் ரான்பரன்சி இன்ரநஷனல் புதிய சனாதிபதியிடம் கேட்டுக்கொண்டுள்ளது.(32)

## கர்ப்பிணிப்பெண்ணை மருத்துவமனையில் அனுமதிக்க வைத்தியர்கள் மறுப்பு

### – பேருந்து நிலையத்தில் பிரசவம்

புத்தளம் லுனுவில அரசாங்க வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய் ஒருவரை மகப்பேற்றுக்காக அனுமதிக்க மறுத்ததை அடுத்து அவர் வீடு திரும்பும் வழியில் குழந்தை ஒன்றை பேருந்து நிலையத்தில் பெற்றெடுத்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இரண்டு மணியளவில் வென்னப்புவ லுனுவில பேருந்து நிலையத்திலேயே இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி ருவான் பெரமுனகேயிடம் வினவியபொழுது, இந்தத் தாயை வைத்தியசாலையில் அனுமதிப்பது தொடர்பாக சில சிக்கல்கள் ஏற்பட்டதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த விடயம் மருத்துவ சேவைக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (32)

## சங்கரி, ஈ.பி.டி.பி. யினர் தாக்கல் செய்த வழக்கை விசாரணைக்கு எடுக்க முடிவு

ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி ஆகியோர் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் இந்த மனுக்கள் எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நேற்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. கடந்த பொதுத்தேர்தலின் போது தமது தெரிவுக்கு எதிராக தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பிலேயே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (32)

## அதிபர் கூட்டம்

சகல பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் வரும் 28 ஆம் திகதி (திங்கள்) காலை 9.00 மணிக்கு துணுக்காய் வலயக் கல்வி அலுவலகக்கேட்போர் கூடத்தில் நடைபெறும். எனவே அன்றைய தினம் தாங்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# யாழ்.மாவட்டத்தில் மாவீரர்நாள் நிகழ்வு ஏற்பாடுகள் குறித்து அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மிக எழுச்சியாகவும், உணர்வு பூர்வமாகவும்,, 2005 ஆம் ஆண்டு மாவீரர்நாள் நிகழ்வுகளை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ள யாழ். மாவட்ட மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழு ஒழுங்குபடுத்தியுள்ளது.

மேற்படி மாவீரர் நாள் நிகழ்வுகளை யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் அமைப்புக்களும், மக்களும் பொறுப்பெடுத்து முழுமையாக மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு மாவீரர் நாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ். குடாநாட்டில் 21 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரை கிராம ரீதியாக சன சமூக நிலையங்கள், மாதர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் ரீதியாக அந்தந்தப் பகுதி மாவீரரின் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அத்துடன் எழுச்சிக் கோலமாக வீதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடி கட்டப்பட்டு சந்திகளில் அலங்கார வளைவுகள் கட்டப்பட்டும் வருகின்றது.

இதன் இறுதி நாள் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் பிரதானமாக நிகழ்வுகள் நான்கு இடங்களில் நடைபெற இருக்கின்றது.

அந்த வகையில் தீவகப் பகுதியில் வேலணை சாட்டியில் அமைந்துள்ள துயிலுமில்லத்தில் நடைபெறும். அங்கு பிற்பகல் 1.00 மணிக்கு அப்பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு பின்னர் பாண்ட் வாத்திய இசையுடன் துயிலுமில்லத் திற்கு அழைத்துச் செல்லப்படுவார் கள்.

இதேபோன்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வன்னி மாவட்டத்திலிருந்து வரும் பெற்றோர் களும், யாழ். நல்லூர்ப் பிரதேச பெற்றோர்களும் அங்கு கௌரவிக் கப்பட்டு துயிலுமில்லத்திற்கு அழைத்து வரப்படுவார்கள்.

இதேபோல் மட்டக்களப்பு, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த, பெற்றோர்கள் கோப்பாய் கல்வியற் கல்லூரியில் கௌரவிக்கப்பட்டு துயிலுமில்லத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். இவர்களுடன் கோப்பாய், அச்சுவேலிப் பகுதி மாவீரர் பெற்றோர்களும் உள்ளடக் கப்படுவார்கள்.

இதேபோல் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப் பாய், காரைநகர், சங்கானை ஆகிய பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர்கள் அழைக்கப் பட்டு கௌரவிக்கப்பட்டு துயிலு மில்லத்திற்கு அழைத்து வரப்படு வார்கள்.

வடமராட்சி எள்ளங்குளம் துயிலுமில்லத்திற்குச் செல்லும் சகல பெற்றோர்களும், கொற்றா வத்தை அ.த.க பாடசாலையில் அல்லது நெல்லியடி மகாவித்தி யாலயத்தில் கௌரவிக்கப்பட்டு துயிலுமில்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இதேபோல் கொடிகாமம் துயிலும் இல்லத்தில் தென்மராட்சி பகுதி மாவீரர் பெற்றோர்கள், கொடி காமம் திருநாவுக்கரசு மகாவித் தியாலயத்தில் வைத்து கௌர விக்கப்பட்டு துயிலுமில்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இதேபோல் கொடிகாமம் துயிலு மில்லத்திற்குரிய வெளிமாவட்டத் திலிருந்து வரும் மாவீரர் பெற்றோர்கள் கொடிகாமம் கண்டி வீதியில் அமைந்துள்ள நாவலடி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை யில் கௌரவிக்கப்பட்டு துயிலு மில்லத்திற்கு அழைத்துச் செல்லப் படுவார்கள் இவர்களுக்கான போக்கு வரத்துக்கள் அந்தந்தப் பகுதி மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுக்களால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்படி ஒழுங்கு படுத்தலுக்கு அமைவாக மாவீரர் பெற்றோர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மாவீரர்நாள் ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டிக் கொள்கின்றனர். (கு.தீ)

# இரணைமடுக் குள நீர் மட்டம் 16 அங்குலம் குறைவடைந்தது

(அலுவலகசெய்தியாளர்)

தொடர் மழையால் நீர் நிரம்பிய இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் நேற்று 16 அங்குலத்தால் குறை வடைந்துள்ளதாக இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரணைமடுக் குளத்திற்கு பெருமளவான நீர் வந்து கொண்டிருந்தது. இதனால் குளத்தின் நீர் கொள்ளளவான 34 அடிக்கும் அதிக நீர் வந்திருந்தது. இந்த நிலையில் குளத்தின் பதினொரு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டு நீர் வெளி யேற்றப்பட்டது. இதை விட நீர் வான் பாய்ந்து கொண்டும் இருந்தது.

இப்படியான நீர் வெளியேற்றப் பட்டும் வெளியேறிக் கொண்டும் இருந்ததால் நேற்று நீர் மட்டம் 16 அங்குலத்தால் குறை வடைந் துள்ளது. நேற்றுக்காலை ஏழு மணிக்கு 34 அடி 2 அங்குலமாக காணப்பட்ட நீர் மட்டம் பிற்பகல் ஆறு மணிக்கு 33 அடி 6 அங்கு லமாகக் குறைவடைந்துள்ளது.

இரணைமடுக் குளத்தின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு 28 அடி வரை நீர் வெளியேற்றப்படும் எனவும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (லோ.தி)

# கனகராயன்குளப் பிரதேசத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கனகராயன்குளப் பிரதேசத்தில் நடைபெற்றது.

முற்பகல் 11. 00 மணியளவில் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளரின் தலைமையில் கனகராயன்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வின் பொதுச்சுடரினை போராளி பேரின்பன், வவுனியா மாவட்ட மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் ஆனந்தன் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியினை குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கோபால் ஏற்றிவைத்தார். அடுத்து மாவீரர் பொதுப் படத்திற்கான சுடரை மூன்று மாவீரர்களின் தாயார் திருமதி சோமசேகரம் ஏற்றினார். இப்படத்திற்கான மலர் மாலையினை மூன்று மாவீரர்களின் தாயார் திருமதி சீதையம்மா அணிவித்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

அத்தோடு, கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கனகராயன்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அத்தோடு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சுபாஸ் மற்றும் போராளிகளும் கலந்து கொண்டனர்.

## மாவீரர்நாள்...

செய்யப்பட்ட இயக்கம் என்ற வகையில் மாவீரர்களுக்காக நடத்தப்படும் நிகழ்வைப் பொலிசார் நாட்டின் சட்டங்களுக்கு எதிரானவை எனக் குறிப்பிடுவது இனத்துவ அடிப்படையில் பாதகமான செயல் என ஹறோ தமிழ் நலன்புரிச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (32)

## உத்தியோகபூர்வ...

களையும்கையளிப்பதாக ஏற்பாடாகிய போதும் நேற்று மாலை வரை இக்கை யளிப்பு நிகழ்வு நடைபெற வில்லை எனத் தெரிய வருகிறது.

## வெள்ளத்தால்...

வில்லை. தொடர்ந்து பெய்த மழை நேற்றுப் பிற்பகல் 4.00 மணி வரை ஓய்ந்திருந்தது. இதனால் வெள்ள நீர் ஓரளவு குறைவடைந்திருந்தது. ஆனாலும் பிற்பகல் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் பெருமளவான மக்கள் இடம்பெயர வேண்டி ஏற்படும் என்றார். வெள்ள அளவு குறைவடைந்தாலும் பூநகரி, அக்கராயன் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல முடியாதவாறு வீதிகள் உடைந்துள்ளன. பல இடங்களில் வீதிகள் இருந்தமைக்கான தடயங் களே இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

## கிளி...

னுயிர் கொல்லிகளும், நீண்ட நாள் நோய்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற மருந்துகளுமே அடங்குவதாகவும் சுமார் பதினைந்து முதல் இருபது வரையான சிறிய பெட்டிகளில் அடைக்கப்பட்ட மருந்துகள் வழங்கப் பட்டதாகவும், இவை எவ்வளவு பெறுமதி வாய்ந்ததென்பதும் தெரியாதுள்ளதாகவும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## கடும்...

னொருவர் உயிரிழந்தார்.

இந்த சீரற்ற காலநிலை காரணமாக கேகாலையில் ஒருவர் உயிரிழந்த தாகவும் பொலிசார் கூறினர். (32)

## தேசியக்...

கொடி இறக்கப்படும் இதற்கான ஒழுங்குகள் அனைத்து இடங் களிலும் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

இதேவேளை, மாவீரர் தினத்தினை உணர்வெழுச்சியுடன் அனுஷ் டிப்பதற்கான முன்னோடி நடவடிக் கைகள் தமிழீழமெங்கும் இடம்பெற்று வருகின்றது.

கிளிநொச்சி-பரந்தன் நகரப் பகுதியிலிருந்து கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் வரையான பகுதி கள் யாவும் சிவப்பு மஞ்சள் கொடி களால் வீதி இரு மருங்கும் அலங் கரிக்கப்பட்டு காட்சியளிப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

வர்த்தக நிலையங்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் யாவும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக் கப்பட்டு காட்சி தருவதுடன், பிரதான வீதிகளிலிருந்து மாவீரர் துயிலுமில் லம் வரையான பகுதிகளில் ஆங்காங்கே அலங்கார வளைவுகள் அமைக் கப்பெற்று வருவதுடன் மாவீரர்களின் தியாகங்களைச் சித்தரிக்கும் பதாகைகளும் கட்டப் பட்டு வருகின்றன.

மற்றும் பொது இடங்களில் விசேட பந்தல்கள் அமைக் கப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பெற்று ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மாவீரர் நாளை முன்னிட்டு முல்லை. மாவட்டம் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளன.

வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் மாவீரர்களின் வீரவரலாற்றைக் கூறும் அலங்கார வளைவுகளும் கட்டப்பட் டுள்ளன.

மேலும் சிரமதானப் பணிகளும் இடம்பெற்று வருகின்றது. புதுக்குடியி ருப்புப் பிரதேசம் எங்கும் மக்கள் மாவீரர் நாள் செயற்பாட்டில் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண் டுள்ளனர்.

இதேபோல் முல்லை. மாவட்டத் தில் கடற்புலிகளின் பிரதேசங்களில் மக்கள் மாவீரர் நாள் செயற்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கொட்டும் மழையிலும் மாவீரர் தின நடவடிக்கைகள் தமிழீழ மெங்கும் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ. ச. 08)

## பாதுகாப்பு....

அமைச்சரவையில் ஜே.வி.பி இடம் பெறவில்லை மகிந்தராஜ பக்ஷவின் அமைச்சர்களில் விபரம்வருமாறு:-

மகிந்தராஜபக்ஷ - நிதி பாதுகாப்பு, ரட்ணசிறி விக்கிரம நாயக்க -பேரழிவு மேலாண்மை, மங்கள சமரவீர -வெளி விவகாரம், துறைமுகம் மற்றும் விமானம், அநுராபண்டாரநாயக்க -சுற்றுலா, டி.எம்.ஜயரட்ண -தபால், தொலைத் தொடர்பு மற்றும் ஊரக பொருளாதார அபிவிருத்தி, நிமால் சிறிபாலடி சில்வா -சுகாதாரம், அமரசிறி தொடங்கொட- நீதி , ஏ.எச்.எம் பௌசி போக்குவரத்து புகையிரதம், பெற்றோலிய வளம்.,ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே -வர்த்தகம், தொழில் முயற்சிகள், நெடுஞ்சாலை , மைத்திரிபால சிறிசேன - விவசாயம், நீர்ப்பாசனம், மகாவலி, ஜோன் செனிவிரட்ண - மின்சாரம் மறறும் எரிசக்தி, சுமேத ஜயசேன- குழந்தைகள் மற்றும் பெண்கள் நலம்., அநுரா பிரியதர்சன யாப்பா - தகவல் மற்றும் ஊடகம்,தினேஸ் குணவர்த்தன -கிராமிய அபிவிருத்தி மற்றும் நீர் விநியோகம்., டக்ளஸ் தேவானந்தா - சமூக சேவை,சரத் அமுனுகம - பொது நிர்வாகம்.

பேரியல் அஸ்ரப் - வீடமைப்பு மற்றும் கட்டுமானம்,சுசில் பிரேம ஜயந்த - கல்வி, அதாவுட செனி விரட்ண- தொழிலாளர் நலம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, எஸ்.பி நாவின்ன -கிராமிய தொழில் மற்றும் சுய வேலைவாய்ப்பு , பியசேன கமகே -தொழில்நுட்ப பயிற்சி, ஜானக பண்டார -மாகாண சபை, ஏ.எல்.எம். அதாவுல்லா- மீன் வளம் மற்றும் வீட்டு வசதி அபிவிருத்தி., திஸ்ஸ விதாரண - அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், டியூ குணசேகர - அரசியல் யாப்பு மற்றும் தேச ஒற்றுமை

29பிரதியமைச்சர்கள் விபரம்

மில்ரோய் பெர்னாண்டோ - கிராமிய பொருளாதார அபிவிருத்தி, திஸ்ஸ கரலியத்த - சமய விவகாரங்கள், சாலிந்த திஸாநாயக்க விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஜகத் புஸ்பகுமார- விவசாய அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு, சமூக சேவைகள், சமுர்த்தி விவகாரம், சேகு இஸ்ஸதீன் - தகவல் தொலைத் தொடர்புகள், ஜயதிஸ்ஸ ரணவீரா- மகாவலி சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம் . அப்துல் மஜீட் -மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், டிலான் பெரேரா - நீதிமன்ற சட்ட மறுசீர மைப்பு, அரசியலமைப்பு மற்றும் தேசிய ஒற்றுமை, ரி.பீ. ஏக்கநாயக்க- அரச நிர்வாகம், டி.எம் தஸநாயக்க -நாட்டைக் கட்டியெழுப்பல் மற்றும் அபிவிருத்தி, மேர்வின் சில்வா - தொழில், பண்டு பண்டாரநாயக்க - சுற்றுச்சூழல் மற்றும் நீர்ப்பாசனம், மகிந்தானந்த அளுத்கமகே - மின்சக்தி, மகிந்த சமரவீர - நகர அபிவிருத்தி நீர்வளங்கள், ஜயரத்ன ஹேரத் -சுகாதர போசாக்கு, தயாசிறி டி திரேசா -பெருந்தெருக்கள்,துமிந்த திஸாநாயக்க - துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் , ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய -நிதி திட்டமிடல் மற்றும் உயர்கல்வி, ரோகித அபேகுணவர்த்தன -தபால் தொலைத்தொடர்புகள்,பிரேமலால் ஜயசேகர - கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு, குணரத்ன வீரகோன் - வீடமைப்பு , லசந்த அழகியவன்ன- போக்கு வரத்து, சிறிபாலகம்லத் -பாவனை யாளர் சேவை மற்றும் விவசாய விநியோகம், ரோகண திஸாநாயக்க- நிதித்திட்டமிடல்,அர்ச்சுன ரணதுங்க - உல்லாசப் பணயத்துறை.

உசைன் பைலா- திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கல் ,நிர்மல கொத்தலாவல - கல்வி,எச்.ஆர். மித்ரபால- வர்த்தக வாணிப நடவடிக் கைகள் ,, விஜயதாஸ ராஜபக்ஷ- வெளிவிவகாரம்.

இதேவேளை அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களும் நேற்று பதவியேற்றுள்ளனர். ஜீவன் குமாரதுங்க இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சரா கவும், சீ.பீ. ரட்ணாயக்கா தோட்ட உட்கட்டமைப்பு கால்நடை அபிவி ருத்தி அமைச்சராகவும், ரிஸாத் பதியுதீன் மீள் குடியேற்ற அமைச்சரா கவும், அப்துல் மஜீத் கூட்டுறவு கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரா கவும், பேராசிரியர் விஸ்வாவர்ணபால பாராளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சராகவும், மகிந்த யாப்பா அபயவர்த்தன கலாசார தேசிய மரபுரிமைகள் அமைச்சராகவும் திஸ்ஸ கரலியத்த சுதேச வைத்திய அமைச்சராகவும், பீலிக்ஸ் பெரேரா மீன்பிடி நீரியல் வள அமைச்சராகவும், பவித்திரா வன்னியாராச்சி சமுர்த்தி அமைச்சராக, சாலிந்த திஸ்ஸ நாயக்கா தெங்கு அபிவிருத்தி அமைச்சராகவும் மில்ரோய் பெனான்டோ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராகவும்,அமீர் அலி அனர்த்த நிவாரண சேவை அமைச்சராகவும், சந்திரசிறி கஜதீர உள் விவகார அமைச்சராகவும், சாமல் ராஜபக்ஷ விவசாய அபிவிருத்தி அமைச்சராகவும் குமார வெல்கம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராகவும், டி.பி ஏக்கநாயக்க வீதி அபிவிருத்தி அமைச்சராகவும், ரோஹித்த ஜயதிஸ்ஸ வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சராகவும், அன்வர் இஸ்மையில் நீர்ப்பாசன அமைச் சராகவும், எஸ்.எம். சந்திரசேன விவசாய சேவை மற்றும் விவசாயி களை ஊக்குவிப்பு அமைச்சராகவும், பந்துல பஸ்நாயக்க விலங்கியல் பூங்கா அபிவிருத்தி அமைச்சராகவும், எம்.எச் குணவர்த்தன பிரதேச அபிவிருத்தி அமைச்சராகவும், திஸ்பதி சூரியாராச்சி நிபுணத்துவ மற்றும் வேலை வாய்ப்புக்கள் அமைச்சராகவும், மஹிந்த அமரவீர புதிய தொடருந்து மார்க்க அபி விருத்தி அமைச்சராகவும் நியமிக் கப்பட்டுள்ளனர். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.